# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**டிசம்பர் 2003 ஜீவியம் 9 மலர் 8**

## இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் V | 2 |
| லைப் டிவைன் | 6 |
| இம்மாதச் செய்தி | 14 |
| அஜெண்டா | 15 |
| அன்பர் கடிதம் | 17 |
| எங்கள் குடும்பம் | 20 |
| சாவித்ரி | 42 |
| பிரம்மம், புருஷா, ஈஸ்வரா-மாயா, பிரகிருதி, சக்தி | 44 |
| லைப் டிவைன் - கருத்து | 52 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 54 |
| இதுவோ உம் ரௌத்திரக் கருணை | 53 |

❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் V

கர்மயோகி

**811) சட்டத்தால் (law or rule) நியாயத்தை வழங்க முடியாது. அவற்றால் அநியாயத்தைத் தடுக்க முடியும். அவற்றாலும் நியாயம் வழங்க முடியும். அதற்குச் சட்டத்தின் பண்பு, நேர்மை, தெளிவு, நியாய உணர்வு தேவை.**

***நியாயத்தை நிச்சயமாக வழங்க முடியாத சட்டம், அநியாயத்தை நிச்சயமாகத் தடுக்கும்.***

**நியாயம் வழங்கும் சட்டம்.**

குற்றம் நடந்தால் நாம் கூப்பிடாவிட்டாலும் போலீஸ் வரும். நம் உரிமை பறிபோனால் கோர்ட் வந்து நியாயம் வழங்காது. நாமே போனால் நியாயம் கிடைக்கும். என்ன நடந்தது என்று கோர்ட் அறிய முயலாது. எதை நிரூபிக்க முடியுமோ அதையே கோர்ட் கருதும். சாட்சி, எழுத்து, கோர்ட்டில் நிற்கும். எதிரி பொய் சொன்னால், சாட்சியில்லாவிட்டால், கோர்ட் கேட்டுக்கொள்ளாது. நியாயம் வழங்குவதைவிட அநியாயத்தைத் தடுப்பதே கோர்ட் கடமை.

பெரும் பணம் கடன் வாங்கியது தெரிகிறது. பிராமிசரி நோட்டிருக்கிறது. ஆனால் காலாவதியாகிவிட்டது என்றால் கோர்ட் தலையிட உரிமையில்லை. நியாயம் தெரிந்தாலும், வலியுறுத்தும் உரிமை கோர்ட்டுக்குக் கிடையாது. ஆனால் பண்பு, நேர்மை, தெளிவு, நியாய உணர்வு இருந்தால், கோர்ட்டும் நியாயம் வழங்க முடியும்.

- அன்பில்லாத பையன் பெற்றோரைக் காப்பாற்ற சட்டமில்லை.
- கோர்ட் சட்டத்திலுள்ளதை நிறைவேற்றும்.
- தர்மத்தைக் காக்கும் ஸ்தாபனமில்லை கோர்ட்.

ஆனால் சில இடங்களில் ஜட்ஜுக்கு discretion சொந்த முடிவெடுக்கும் உரிமையுண்டு. அந்த இடங்களில் ஜட்ஜ் நியாய மனப்பான்மையுள்ளவரானால், சட்டத்திலில்லாத நியாயத்தை வழங்க முடியும். அந்த உரிமையை ஜட்ஜ் பாராட்டினால் கோர்ட் சட்டமன்றமாக இல்லாமல் நியாயமன்றமாகும். அதுபோன்று ஜட்ஜ் உயர்ந்தவராக இருந்தால், அன்னை அந்நியாய உணர்வுமூலம் சட்டத்திற்குத் தேவையான தஸ்தாவேஜை எங்கிருந்தாவது உற்பத்தி செய்வார். ஜட்ஜுக்கு அதில்லாவிட்டாலும், பக்தருக்கு அது இருந்தால், அன்னையின் நியாயம் சட்டத்திற்குத் தேவையான evidence நிரூபணமாகப் புறப்படுவதைக் காண்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

❀❀❀

**812) உடல் பழக்கத்தை வலியுறுத்தாவிட்டால், உணர்வு ஆசையை விட முன்வந்தால், மனம் அன்னை முடிவை ஏற்றால் ஆத்ம சமர்ப்பணம் முடியும்.**

***பழக்கமும் ஆசையும் போய் அன்னை முடிவு வருவது சமர்ப்பணம்.***

சமர்ப்பணம் நினைவுக்கு வருமுன் கை எழுத ஆரம்பிக்கிறது. வாய் பேச ஆரம்பிக்கும். உடல் பழக்கத்திற்கு உட்பட்டது. வாய் ஆசையை நிறைவேற்றும். இவையிரண்டும் விலகினால், சமர்ப்பணம் செய்ய முடியும். விலகாதவரை சமர்ப்பணமில்லை. ஆயுள் முழுவதும் செய்யும் முயற்சிக்கும் பலன் பெறுவது கடினம்.

❀❀❀

**813) பெரியவர்களுடைய குறையைக் காணுதல் முடியும் என்றாலும் எவரும் அதில் ஈடுபடுவதில்லை. சிறிய மனிதனின் நிறைவைக் காண பெரிய மனதுடைய மனிதரால் மட்டுமே முடியும்.**

***சிறியதன் நிறைவை பெரியதே காணும்.***

பெரியவர்கள் குறையைப் பொதுவாகப் பொருட்படுத்துவது இல்லை. சிறியவனின் நிறைவு கண்ணில்படுவதில்லை. சிறிய மனிதனின் திறமை, பண்பு, நல்லெண்ணம், உயர்வு ஆகியவற்றைக் காண மனம் பரந்ததாக இருக்கவேண்டும். பெரியதன் கண்ணில் பெரியது படும்.

❀❀❀

**814) பெரியதும், சிறியதும் ஆதியில் ஒன்றே என்றறிவது ஆன்மீகத் திருஷ்டி. நடைமுறையிலும் அவை ஒன்றே என்று பூரணயோகம் காண்கிறது.**

*ஆதியில் ஒன்றானவை, நடைமுறையிலும் ஒன்றே.*

பெரியது என்பது ஆண்டவன், பிரம்மம், சத்புருஷன், பரமாத்மா எனப்படுவது. சிறியது என்பது ஒரு செயல். சட்டை தைப்பது, சுவர் கட்டுவது போன்றவை. இவையிரண்டும் எப்படி ஒன்றாகும்?

பெரியது சிருஷ்டியில் முனைந்து சிறியதானதால் பெரியதே சிறியது என்றறிகிறோம். நாட்டில் மாவீரன், தலைவன், மேதை, அவதாரம் ஆகியவர் போற்றப்படுகிறார்கள். அனைவரும் குழந்தையாய்ப் பிறந்தவர்களே. அவர்களுள் பலர் எளிய வாழ்வை வாழ்ந்தவர்கள். இந்த ஜன்மத்தில் அவர்கள் மேதையாகவோ, அவதாரமாகவோ ஆகவில்லை.

*அவதாரமாகப் பிறந்து அவதாரமாக அவர்கள் வளர்ந்தார்கள்.*

அன்று அவர்கள் அம்சம் நமக்குப் புரியவில்லை. இன்று புரிகிறது. அவர்கள் என்றும் ஒன்றுபோலவே இருக்கிறார்கள். கம்ப்யூட்டர் சிப் என்பது மணலிலிருந்து செய்யப்படுகிறது. மருந்துகள் கரி, பெட்ரோலிலிருந்து செய்யப்படுகின்றன. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மரம், செடி, கொடிகள் மக்கி கரியாயிற்று. மரம்,



செடி, கொடி மண்ணிலிருந்து வந்தது. மண் என்பது “ஜடம்” Matter எனப்படும். ஜடம் எப்படி ஏற்பட்டது? மனம் புலன்வழி ஜடத்தை உற்பத்தி செய்தது. ஜடமாக நாம் காண்பது ஆன்மா. ஆன்மா சத்புருஷனுடைய அகம். **கம்ப்யூட்டர் சிப் ஆதியில் சத்புருஷன் பெரியதாகும்.**

- **இன்றைய தலைவன் அன்றைய குழந்தை, அன்று தெருவில் சுற்றிய அனாதை.**
- **அன்றைய பிரதமர் இன்றைய M.P., வெறும் அரசியல்வாதி. சாதாரண எளிய மனிதன்.**
- **இன்றைய செல்வந்த நாடான அமெரிக்கா அன்றைய காடு.**
- **அன்று பெருநகரமாக இருந்த மொகன்ஜோதாரா இன்று பாழடைந்த மண் சுவர்.**
- **அன்றைய பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இன்று வெறும் இங்கிலாந்து.**
- **ஏற்றம், தாழ்வு நாம் காண்பது.**
- **பரமாத்மா ஜீவாத்மாவாகி அகந்தையாயிற்று.**
- **அகந்தை பரிணாமத்தால் பரமாத்மாவாகிறது.**
- **பிரம்மம் சிருஷ்டியில் ஜடமாகியதால் ஜடம் பிரம்மமாகும் - சிறியது பெரியதாகும்.**
- **ஒரு ஜென்மத்தில் மடையன் அடுத்த ஜன்மத்தில் மேதையாகிறான்.**
- **மேதை வரும் பிறப்புகளில் மடையனாக விருப்பப்படுவான்.**
- **பெரியதும், சிறியதும் ஆதியில் ஒன்றே.**

❀❀❀

*தொடரும்.....*

**ஜீவிய மணி**

தானே செய்ய அறிவு போதும்.
உலகுக்கு அளிக்க ஞானம் தேவை.

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XII. Delight of Existence : The Solution

This view has certain consequences. Page No. 104
They inevitably impose themselves. Para No. 8
In our depths we are that One.
It is of first importance.
There is a reality of our being.
There we are the indivisible All-Consciousness.
Therefore we are the inalienable All-Bliss.
Our sensational experience has another disposition.
They are three vibrations.
They are pain, pleasure and indifference.
It is only a superficial arrangement.
It is created by the limited part of ourselves.
That part is uppermost in our waking consciousness.
Behind these must be something in us.
It is much vaster, truer, profounder.
It is deeper than the superficial consciousness.
That takes delight in all experiences.
It is impartial.
It is a delight that secretly supports.



## 12. ஆனந்தம் - விளக்கம்

இக்கருத்திற்குச் சில பலன்களுண்டு.
இப்பலன்கள் தவிர்க்க முடியாமல் நிர்ப்பந்தம் செய்யும்.
ஆழத்தால் நாம் ஏகன் எனும் இறைவன்.
இது முக்கியம் வாய்ந்தது.
நமது ஜீவனுடைய சத்தியம் இது.
அங்கு நாம் அகண்ட ஜீவியம்.
அதனால் நாம் நீங்காத ஆனந்தம்.
நம் உணர்வின் அனுபவம் வேறு.
அவை மூன்று.
வலி, சந்தோஷம், பராமுகம் அவை.
இது மேலெழுந்த நிலை.
நம்மில் பகுதியான கரணத்தால் இது ஏற்படுத்தப்பட்டது.
அப்பகுதி நமது விழிப்பில் மேலோங்கியுள்ளது.
இவற்றின் பின்னால் நம்முள் ஒன்றிருக்க வேண்டும்.
அது அகன்றது, சத்தியமானது, கனமானது.
மேலெழுந்த ஜீவியத்தைவிட அது ஆழத்திலுள்ளது.
எல்லா அனுபவங்களையும் அது அனுபவிக்கின்றது.
அது பாரபட்சமற்றது.
அந்த ஆனந்தம் இரகஸ்ய ஆதரவு.

**It supports the superficial mental being.**
**It enables us to preserve through all labours.**
**The movement in the Becoming is agitated.**
**It suffers and undergoes ordeals.**
**We are on the surface.**
**It is only a trembling ray.**
**We call it ourselves.**
**Behind is the vast subconscient.**
**The vast superconscient too is behind.**
**Both profit by all the surface experiences.**
**They impose them on the external self.**
**It is a sensitive covering to the contacts of the world.**
**The external self is thus exposed.**
**It is veiled.**
**It receives these contacts.**
**It assimilates them into values.**
**They are values of experience.**
**The experiences are truer, profounder and creative.**
**They are mastering experiences too.**
**Out of its depths, it returns them to the surface.**
**They come in forms of strength, character and knowledge.**
**They come as impulsions too.**
**The roots of those impulsions are mysterious to us.**
**It is so to our minds.**
**Our mind moves and quivers on the surface.**
**The mind has not learned to concentrate itself in the depths.**
**Nor does it live there.**



**மேலெழுந்த மனத்திற்கு அது ஆதரவளிக்கிறது.**
**நம் உழைப்பைத் தாங்கும் சக்தியை அது அளிக்கிறது.**
**பிரகிருதியின் சலனம் படபடக்கும்.**
**அது துன்பப்பட்டு, வேதனையை அனுபவிக்கிறது.**
**நாம் மேலெழுந்தவாரியாக இருக்கிறோம்.**
**அது ஓர் இழை, அதிர்வான இழை.**
**நாம் அதை நாம் என நினைக்கிறோம்.**
**அதன்பின் ஆழ்ந்த மனமுண்டு.**
**பரமாத்மாவும் நம் பின் உள்ளது.**
**மேலெழுந்த அனுபவத்தை இரண்டும் பெறுகின்றன.**
**புறவாழ்வை அவை கட்டுப்படுத்துகின்றன.**
**உலகத் தொடர்பின் மீதுள்ள உணர்வுமயமான போர்வை அது.**
**புறவாழ்வு அப்படி ஆதரவற்றுள்ளது.**
**அது திரையிடப்பட்டுள்ளது.**
**தொடர்புகளை அது பெறுகின்றது.**
**தொடர்பின் பலனை அது கிரகித்துக்கொள்கிறது.**
**அவை அனுபவத்தின் பண்புகள்.**
**அனுபவங்கள் உண்மையானவை, ஆழமானவை, படைக்கவல்லவை.**
**அவை நம்மை மீறி ஆட்கொள்ளும் அனுபவங்கள்.**
**ஆழத்தினின்று அவை மேலே வருகின்றன.**
**அவை பலம், சுபாவம், ஞானம் ஆகிய ரூபங்களில் வருகின்றன.**
**அவை உந்துதல்களாக வரும்.**
**அந்த வேகத்தின் வேர் நமக்குப் புதிர்.**
**மனம் அப்படியிருக்கிறது.**
**மனம் மேலே சஞ்சாரம் செய்து அதிர்கிறது.**
**மனம் ஆழத்தில் உறைய அறியவில்லை.**
**ஆழத்தில் அது நிலையாக இருப்பதில்லை.**

Page No. 104
Para No. 9

Our life is ordinary.
The truth is hidden from us.
Or it is only dimly glimpsed at times.
Or it is imperfectly held or conceived.
There is the presence within us.
We will infallibly awaken to it.
For that we must learn to live within ourselves.
It is our more real self.
It smiles at our pleasures and pains.
We do so at the error and passion of a little child.
We can go back into ourselves.
We can identify ourselves with the radiant penumbra of the Divine.
It is not an identification with our superficial experience.
Then we can live in that attitude.
It is an attitude towards contacts of the world.
Thus we can stand back in our consciousness.
We stand back, thus, from our pleasures and pains of the body.
They are of the vital being and mind.
They can be possessed as experiences.
Their nature is superficial.
It does not touch our core.
Our core is our real being.
Sanskrit terms are entirely expressive.
There is *anandamaya* behind *manomaya*.
It is a vast Bliss-Self behind the limited mental self.
The mental self is only a shadowy image.



வாழ்வு சாதாரணமானது.
சத்தியம் ஒளிந்துள்ளது.
ஏதோ ஒரு சமயம் மங்கலாகத் தெரிகிறது.
அரைகுறையாகப் புரிகிறது.
ஆண்டவன் உள்ளேயிருக்கிறான்.
தவறாமல் நாம் அதையறியலாம்.
அதற்கு நாம் உள்ளே வாழ அறியவேண்டும்.
அது நம் உண்மையான ஜீவன்.
நம் இன்பதுன்பங்களைக் கண்டு அது கேலியாக நகைக்கின்றது.
இது குழந்தையின் ஆர்வம், இடறி விழுவதை நாம் காண்பது போன்றது.
நாம் உள்ளே போகலாம்.
பிரகாசமான நிழலுடன் நாம் ஐக்யமாகலாம். அது இறைவன்.

அது நம் மேல்மனத்தோடுடைய ஐக்யமன்று.
அப்படியானால் நாம் அந்நோக்கத்தை ஏற்கலாம்.
உலகத்துடன் வாழும் நோக்கமாகும் அது.
நாம் நம் ஜீவியத்தில் இருக்கலாம்.
நம் இன்ப துன்பங்களினின்று அப்படி விலகி நிற்கலாம்.

அவன் நம் மனத்திற்கும் வாழ்விற்கும் உரியவன்.
அவற்றை நாம் அனுபவமாகப் பெறலாம்.
நம் சுபாவம் மேலே உள்ளது.
அது நம்மை உள்ளே தொடுவதில்லை.
நம் உண்மையான ஆத்மா உள்ளேயுள்ளது.
சமஸ்கிருதச் சொற்கள் அர்த்தபுஷ்டியுள்ளவை.
மனோமயத்தின் பின் ஆனந்தமயம் என சமஸ்கிருதம் கூறுகிறது.
மனத்தின் பின் ஆனந்தம் உள்ளது.
மனம் நிழல் போன்றது.

**It is a disturbed reflection of the Bliss-Self.**
**We have a truth.**
**It lies within.**
**It is not on the surface.**

*Contd...*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தனக்குப் பிடிப்பதைச் சிறந்த அபிப்பிராயமாகவும், உயர்ந்த ஞானமாகவும் கருதுகிறோம்.

***தான் கண்டதே ஆத்மஞானம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எதைத் தேடவேண்டும் என்பது ஞானம்.

ஆன்மாவை எப்படித் தேடவேண்டும் என்பது யோகம்.

ஆன்மா நம்மை அறிவது ஆத்ம ஞானம்.

சமர்ப்பணத்தால் ஆனந்தத்தைத் தேடுவது பூரண ஞானம்.

***தேடும் ஞானம்.***
***எப்படிப் போவது என்ற யோகம்.***
***ஆன்மாவை அறியும் ஆன்ம ஞானம்.***
***சமர்ப்பணம் தரும் பூரண ஞானம்.***



**மனம் ஆனந்தமயம் சிதறியதால் ஏற்பட்டது.**
**சத்தியம் உண்டு.**
**அது உள்ளேயுள்ளது.**
**அது மேலேயில்லை.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் அலைபாய்வதுண்டு. உணர்ச்சி வசப்பட்டாலும், சைத்தியப்புருஷன் நிலைத்தாலும் அலைபாய்வது நின்றுவிடும்.

***ஆன்ம விழிப்பின் பலனைப் பொங்கிவரும் உணர்ச்சி தரும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வேலை தடைப்பட்டு, சிரமமாகி, சிக்கலாகிவிட்டபின், முழு நேரமும் விழிப்பாக இருப்பது வழக்கம். அது உதவும். தடையின் சூட்சுமம் தெரிந்தால், விலக்கலாம். அதன்பின் முழுநேர விழிப்பு தேவைப்படாது (சாவி கொடுத்தால், கடிகாரத்திடம் வேலையில்லை).

***முழுநேர விழிப்பை விலக்கும் சூட்சுமம்.***

## இம்மாதச் செய்தி

**தெரிந்தவற்றையெல்லாம் செய்யாதவன் புதியதாகக் கற்பது பலன் தருமா?**

**First things first.**

☆☆☆





**"Ashram symbolised all the difficulties to be resolved. People coming to the Ashram are beset with difficulties, instead of finding help. So, she can stay where she is" - *The Mother* 1972.**

**“ஆசிரமம் தீர்க்கப்படவேண்டிய சிரமங்களின் சின்னம். இங்கு வருபவர்கள் உதவி பெறுவதற்குப் பதிலாக தொந்தரவுக்கு ஆளாகிறார்கள். அதனால் அவர் இருக்குமிடத்திலேயே இருக்கலாம்” - *அன்னை* 1972.**

அஜெண்டா 13 வால்யூம்கள். கடைசி வால்யூம் 1972, 1973-இல் எழுதப்பட்டது. அங்கு அன்னை இவ்வாறு கூறுகிறார்கள். இது சம்பந்தமான கருத்துகளை அன்பர்கள் அறிவார்கள். எனினும் அவற்றைக் கீழே எழுதுகிறேன்.

- ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் மற்ற ஆசிரமங்களைப்போல் ஏற்பட்டதன்று.
- பூரணயோகம் உலகத்துச் சுபாவங்களை எடுத்து மாற்ற முயல்வதால், அந்தச் சுபாவங்களுடைய பிரதிநிதிகள் அன்னையை நாடி வந்தனர்.
- பூர்வஜென்மத்தில் அன்னையிடமிருந்தவர்களே அப்படி வந்தனர்.
- இறைவன் திருவுள்ளம் பூர்த்தியாகும்பொழுது நான் உங்களுடனிருக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து அதை மறந்தவர்கள் சாதகர்கள் என அன்னை கூறியுள்ளார்.
- உலகில் எந்த நல்லது நடக்கவேண்டுமானாலும், முதலில் அது ஆசிரமத்தில் நடக்கவேண்டும் என்று அன்னை கூறியுள்ளார்.

- இதுபோன்ற ஆசிரமங்கள் ஸ்தாபகருக்குப்பின் மூடப்படவேண்டும் என பகவான் கூறியுள்ளார்.
- யார் அழைத்தாலும், எங்கிருந்து அழைத்தாலும் உடன் அன்னை வருவதை நாம் காண்கிறோம்.
- பகவான் ஆசிரமம் ஆரம்பிக்க நினைக்கவில்லை. *The Life Divine* எழுத நினைக்கவில்லை. அன்னையின் வேண்டுகோளுக்கிணங்க செய்தவை அவை.
- அன்னை மேலே கூறியதை நாம் அப்படியே ஏற்கலாம், அல்லது நம் அனுபவத்தின் பேரில் செயல்படலாம்.
- உலகில் நல்லது நடக்கவேண்டும். உலகின் சிரமங்கள் தீரவேண்டும், நல்லது நடக்கும்பொழுது பிறர் அதில் கலந்துகொள்ளலாம். சிக்கல்கள் தீருமிடத்தில் கலந்துகொள்ளுதல் சுலபமன்று.
- அன்னையின் கோட்பாடுகளை ஏற்பது அன்னையை ஏற்பதாகும். அது வழிபாட்டைவிடக் கடினமானதாகும்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

வாழ்வில் மனிதச் சூழ்நிலையை ஆர்வமாக அரவணைத்தால் முன்னேற்றம் பிறக்கும்.

இறைவனின் சத்தியத்தை ஆர்வமாக அணுகினால் அவனுக்குப் பரிணாம வளர்ச்சியுண்டு.

*சூழ்நிலையை ஏற்கும் மனிதன் உயர்வான்.*

*சத்திய ஆர்வம் பரிணாம வளர்ச்சி.*



# அன்பர் கடிதம்

**அன்னையே துணை**

*1)* என் வீட்டில் அன்னையின் அருள் கிடைக்கத் தொடங்கியது என் மகள் ப்ரியதர்ஷணி மூலமாகத்தான். அவள் ஓர் அன்னை பக்தை. அவள் கூறிய பிறகுதான் நானும், குடும்பமும் அன்னையை pray செய்யத் தொடங்கினோம். 1½ வருடம் இருக்கும், அன்னை எங்கள் இருவரையும் ஒரு பெரிய விபத்தில் இருந்து காப்பாற்றினார். நானும், மகளும் two-wheelerஇல் கிட்டத்தட்ட 2 மணி நேரம் கடை, பாங்க், மார்க்கெட் என்று சுற்றிவிட்டு அன்னை தியான மையம் சென்றோம். ப்ரே பண்ணிவிட்டு வந்து வண்டியை ஸ்டார்ட் செய்யும்முன் பார்த்தால், பின்பக்கம் wheelஐ இணைக்கும் rod கட்டாகி, கொஞ்சமாக ஒட்டிக்கொண்டு இருந்தது. பக்கத்து மெக்கானிக் ஷாப்பில் வண்டியை விட்டால், அவர் ஆச்சரியப்பட்டு, “எப்படி இதனை ஓட்டி வந்து ஆபத்து இல்லாமல் தப்பினீர்கள்!” என்று கேட்டார். அன்று அன்னைதான் எங்களைக் காப்பாற்றியிருக்கிறார்.

*2)* தெரிந்த நண்பர்மூலமாக ஒரு பெண்மணியிடம் சீட்டுச் சேர்ந்தோம். பணம் 8வது சீட்டு முடிந்து 1½ மாதம் ஆகியும் தரவில்லை. சீட்டுச் சேர்ந்தபோதும் அன்னையிடம் ப்ரே பண்ணிவிட்டுத்தான் சேர்ந்தோம். பணம் போய் கேட்டாலே, அந்தப் பெண்மணி பேசும் மரியாதையற்ற வார்த்தைகளால் மனம் நொந்து அன்னையிடம் முறையிட்டேன். அன்னையை மீண்டும் ப்ரே செய்த ஒரு வாரத்தில், எங்கள் நண்பரே பணத்தை வாங்கிக் கொடுத்துவிட்டார்.

*3)* என் மகன் மிகவும் சுட்டிப் பையன். 8வது வகுப்பு வரைக்கும் நன்கு படித்து வந்தான். பள்ளியில் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்தவன், 9வது வகுப்பு வந்து சில நாட்களிலேயே, கோபம்,

பிடிவாதம், எதிர்த்துப் பேசுதல் என்று மாறிவிட்டான். அன்னையிடம்தான் ப்ரே பண்ணுவேன். அன்னை அருளால் +2 பாஸ் செய்து, B.E.யும் சேர்த்தும், 5 வருடங்களாக மனக்கஷ்டம் கொடுத்தவன், எதிர்பார்ப்புடன் காத்துக்கொண்டிருந்த எங்கள் அனைவரையும் மகிழ்விக்கும்படி மாற்றியது, அன்னையின் அருள்தான்.

4) நாங்கள் கோடை விடுமுறையில் 2 மாத காலம் ஊருக்குப் போய்விட்டோம். கிளம்பும் 1 வாரத்திற்குமுன்தான் கேஸ் ஸ்டவ் கிளீன் செய்து புது டியூப் மாற்றியிருந்தோம். ஊரில் இருந்து நான் மட்டும் தனியாக வந்தேன். தினமும் காலையில் அன்னையை ப்ரே செய்துவிட்டுத்தான் வேலையைத் தொடங்குவேன். வந்து ஒரு வாரமாக ஸ்டவ் உபயோகப்படுத்தியிருக்கிறேன். 19.7.03 அன்றும் காலையில் ப்ரே பண்ணிவிட்டு, விளக்கை (light) போட்டுவிட்டு, பால் காய்ச்சி டீ போட்டேன். பின்பு ½ மணி நேரம் கழித்து, சுடுநீர் வைக்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தபொழுதே, புஸ் என்று சத்தம் கேட்டது. எங்கிருந்து சத்தம் என்று புரியாமல் சுற்றும், முற்றும் பார்த்தேன். பின்பு ஸ்டவ்வை பார்த்தால் என்னவென்று சொல்ல! ஸ்டவ்வுடன் இணையும் இடத்தில் இருக்கும் ரப்பர் குழாய் வெள்ளரிப் பழம்போல் பிளந்து கிடந்தது. "என்னே அன்னையின் அருள்!" பக்கத்தில் தீபம் எரிந்துகொண்டு இருக்கு, லைட் போட்டு இருக்கேன், ஸ்டவ்வில் பால் காய்ச்சி, டீ போட்டு இருக்கேன். ஆனால் எதையுமே எனக்குக் காட்டாமல், தானே அத்தனை வேலைகளையும் செய்து கொடுத்து அருள் புரிந்து இருப்பதை என்னவென்று சொல்ல.

இன்றும், இப்பொழுதும், எங்கு நான் சென்றாலும், அன்னையே என் உடன் இரு, இந்த வேலையை எப்படி முடிப்பேன் என்று ப்ரே பண்ணுவேன். சிறு குழந்தையாகவோ, நண்பனாகவோ, நண்பியாகவோ, என் குழந்தைகள் கூடப் படிப்பவர்களாகவோ,



தாயாகவோ, யார் உருவத்திலேயாவது வந்து எங்களைக் காப்பாற்றிக் கொண்டேயிருக்கிறார்.

இந்நிகழ்ச்சிகளை நான் எழுதும்போதும் என் அருகிலேயே இருக்கிறார். அன்னை அன்பர்களை என்றும் அன்னை காத்து இரட்சிப்பார் என்பதில் துளியும் ஐயம் வேண்டாம்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நிம்மதியாகச் சற்று இருக்கலாம் (relaxation) என்பது ஆழ்மனம் தன்னைத் தன்போக்கில் செலுத்த ஆசைப்படுவதாகும்.

***ஆசையை ஆணித்தரமாக ஆழ்ந்து அனுபவிக்க நிம்மதியாக இருக்க வேண்டும் என்கிறான்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பலனுக்கான பிரார்த்தனை இறைவனை, திசைதிருப்புவதாகும். மேலே போய் முழுமையடையும்படி வாழ்வை உயர்த்துவது பரிணாமம். குறிப்பான பிரார்த்தனை எளியவனுக்குப் பரிணாமம்.

***நம்மை உயர்த்தும் பிரார்த்தனை உயர்ந்த பிரார்த்தனை.***

## எங்கள் குடும்பம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

பார்ட்னர் : அவை பலித்தனவா?

மனைவி : எல்லாம் பலித்தவையே. பலிக்கும் அளவு எண்ணத்தின் தீவிரத்தைப் பொருத்தது.

பார்ட்னர் : சமர்ப்பணம் கொடுத்த உச்சகட்ட நல்லதுண்டு என்றால் நான் அறியப் பிரியப்படுகிறேன்.

மனைவி : அதற்கு சமர்ப்பணம் காரியத்தை நினைக்கக்கூடாது.

பார்ட்னர் : அதை, சற்று சொல்லவும்.

மனைவி : அது தத்துவம்.

பார்ட்னர் : அதுதான் எனக்கு வேண்டும்.

மனைவி : நாம் அன்னையைவிட்டு அகன்றிருப்பதால் நாம் அவருக்குச் சமர்ப்பணம் செய்கிறோம். அன்னையை மனத்தில் பிரதிஷ்டை செய்திருந்தால் - நாம் அவருக்குச் சரணடைந்திருந்தால் - சமர்ப்பணம் தேவைப்படாது. தானே செயல்கள் சமர்ப்பணமாகும். அதற்குரிய உச்சகட்டப் பலனை வாழ்வில் காணமுடியாது. அது மௌனம், சாந்தி, ஜோதியாகவும், பிரம்மமாகவும், அனந்தம், ஆனந்தமாகவுமிருக்கும். அது எல்லா அன்பர்களுடைய அனுபவத்திற்கும் பின்னணியில் இருந்தாலும், தெரிவதில்லை.

பார்ட்னர் : நான் எதைச் செய்தால் சிறப்பு?

மனைவி : புதிய தொழிலை அன்னை முறைப்படிச் செய்வது சமர்ப்பணம், சரணாகதியாவதாகும். சொந்த வாழ்வில் நினைவு வழிபாடாவது நல்லது.



மைத்துனர்: நான் இதுவரை அன்னையை அறியவில்லை. நீங்கள் பேசும்பொழுது மனம் நீங்கள் கூறுவனவற்றையெல்லாம் சற்று உணர்கிறது.

மனைவி : நீங்கள் அவற்றையெல்லாம் கவனிக்கவில்லை. வாழ்க்கைப் பலனான மெடிகல் அட்மிஷன் வந்தது. அதையும் கவனிக்கவில்லை.

பார்ட்னர் : கவனிப்பது அவசியமா?

மனைவி : கவனிக்காமலிருந்தால் தொடர்ந்து நடக்கும், கவனித்தால் நின்றுவிடும். அலட்சியமாகக் கவனிக்காமலிருந்தால் பலன் ஏற்படாது. மனம் அன்னையில் ஈடுபட்டு நெஞ்சு நிறைந்து, ஏற்படும் பலன்களைப் பலனெனக் கருதி கவனிக்காமலிருந்தால் தொடர்ந்து நடக்கும்.

கணவர் : நீ சொல்வது பிரார்த்தனை செய்தால் பலிக்கும், மனம் மாறினால் அதிகம் பலிக்கும், தீவிரமானால் மேலும் பலிக்கும், ஆதாயத்தை நாடாவிட்டால் பலன் உள்ளே வரும், அமைதியை நாடினால் பலன் உள்ளும் புறமும் வரும் என்பதா?

பார்ட்னர் : (ஒரே சமயத்தில்) இது நல்ல சுருக்கமாகும்.
மைத்துனர்
மனைவி

கணவர் : எனக்கென்ன உபதேசம் செய்வாய்?

மனைவி : நான் உபதேசம் செய்யக் கூடாது. உங்களுக்கு நான் எதுவும் சொல்லக் கூடாது என்பதே எனக்குரிய சட்டம்.

பார்ட்னர் : நான் மீண்டும் வருகிறேன்.

மைத்துனர்: நானும் அவருடன் வருகிறேன்.

ஒரு மாதம் கழித்து பார்ட்னரும், அவர் மைத்துனரும் கணவருடன் வந்தனர். அவர்கள் கண்டன ஏராளம், பெற்றவை பல, அனுபவித்து ஆனந்தப்பட்டவை எண்ணிலடங்கா. தொட்டனவெல்லாம் வெற்றி. நினைவுக்கெட்டாத அனுபவங்கள் ஏராளம். கேட்கவேண்டிய கேள்விகள் ஆயிரம். பார்ட்னரும், மைத்துனரும் புதுப்பிறவிகளாகக் காட்சியளித்தனர். கணவர் முகம் அப்படியில்லை. பெண்ணும், பிள்ளைகளும் கலந்துகொண்டனர். வந்தவர்கள் பேசப் பேச, பிள்ளைகள், "ஏம்மா, நமக்கு இப்படியெல்லாம் நடக்கவில்லை?" என்றனர். அதைப் பலமுறை கேட்டனர். அதே கேள்வி கணவர் மனத்திலும் இருந்ததால் அவருக்கு எரிச்சலும், கோபமும் ஏராளம்.

மைத்துனர்: எத்தனை வருஷமாக எனக்கு அன்னையைத் தெரியும்? நான் இதுவரை அன்னை என்றால் என்ன என்று தெரிந்துகொள்ளவில்லையே.

பார்ட்னர் : எதற்கும் நேரம் வரவேண்டாமா?

பெண் : எங்க அம்மா வேண்டாம் என்பார்.

மைத்துனர்: அது என்ன?

தாயார் : எதற்கும் நேரம் வரும்வரை காத்திருக்கவேண்டும் என்பது நம் மரபு. நம் மனம் தயாரானால் நேரம் வரும் என்பது அன்னை. நேரத்தை வரவழைக்கலாம் என்பது அன்னை.

பார்ட்னர் : கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள்.

தாயார் : இராமபிரான் வந்து அவர் பாதம் பட்டால் அகல்யா சாபம் தீரும் என்பது கதை. கல்லான அகல்யா, இராமனுக்காகக் காத்திருக்கிறாள். இது கர்மம். அது கரைய நேரம் தேவை. அது விதிக்கப்பட்டது.

மைத்துனர்: அதை மாற்ற முடியுமா?



தாயார் : காலத்திற்குக் கட்டுப்பட்டவரால் காலத்தை மாற்ற முடியாது.

பார்ட்னர் : காலத்திற்குக் கட்டுப்படாத மனிதன் உண்டா?

தாயார் : ஆத்மாவை அறிந்தவனுக்கு அது இல்லை. காலம் அவனுக்குக் கட்டுப்படும். அவன் நேரத்தை வரவழைக்க முடியும்.

பார்ட்னர் : எங்கள் பாக்டரியைத் திறக்க இன்னும் 6 மாதமாகும். கட்டடம் கட்டவேண்டும். நேற்று எஸ்டேட் மானேஜர் அங்குக் கட்டடம் தயாராக இருக்கிறது. எடுத்துக்கொள்ளுங்கள் என்றார். காலத்திற்காக நாங்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. இது எப்படி?

தாயார் : அன்னை காலத்தைக் கடந்தவர். நம் மனம் காலத்திற்குட்பட்டது. அன்னையை ஏற்றவுடன் மனம் காலத்தின் பிடியினின்று வெளிவந்தது. எஸ்டேட் கட்டடம் வருகிறது. இதுவே நாம் காலத்தைக் கடப்பது, நேரத்தை வரவழைப்பதாகும்.

மைத்துனர்: நான் ஏற்கனவே அன்னையை அறிந்தது கணக்கில்லையா?

பார்ட்னர் : அறிவது வேறு, ஏற்றுக்கொள்வது வேறா?

தாயார் : அன்னையை அறிந்தது முதல் உங்கள் ஜாதகத்தைப் பார்த்தால் தெரியும்.

பார்ட்னர் : சொற்பொழிவில் ஜாதகம் பார்க்கக் கூடாது என்றாரே.

தாயார் : ஜாதகத்தை நம்பக் கூடாது. பார்ப்பது நல்லதன்று. அன்னையை அறிந்த இந்தப் பல வருஷங்களில்

ஜாதகத்தில் கூறிய தவறுகள் நடந்திருக்காது. அதில் இல்லாத நல்லவை நடந்திருக்கும்.

மைத்துனர்: எங்கள் பாட்டி அடிக்கடி சொல்வாங்க, அவருக்கு என் ஜாதகம் மனப்பாடம், ''இதெல்லாம் ஜாதகத்தில் இல்லையே'' என்று.

பார்ட்னர் : எனக்கு, பாக்டரிக்கு மானேஜரிலிருந்து வாட்ச்மேன் வரை நியமிக்க வேண்டும், என்ன செய்ய?

தாயார் : செய்ய வேண்டியவற்றை எல்லாம் - விளம்பரம், இன்டர்வியூ - தவறாது செய்யுங்கள். மற்றவர்கள் போலில்லாமல், அன்னை முறைப்படி செய்யுங்கள்.

மைத்துனர்: நேர்மையாகச் செய்ய வேண்டுமா?

பார்ட்னர் : அன்னையை நினைத்துச் செய்ய வேண்டும்.

கணவர் : என் மானேஜர் என்னைக் கூப்பிட்டனுப்பினார். தமது மைத்துனருக்கு நம் தொழிலில் நல்ல பெயர். அவரை நியமிக்க முடியுமா எனக் கேட்டார்.

பார்ட்னர் : அவரைப் பற்றித்தான் போனில் பேசினீர்களா? இத்தொழிலில் நாட்டில் முதன்மையானவராயிற்றே. தேடிப்போனாலும் கிடைக்கமாட்டாரே.

கணவர் : என் மானேஜர் என்ன சொன்னார் தெரியுமா? சம்பளம் சற்றுக் குறைவாயிருந்தாலும் பரவாயில்லை. அவர் குடும்பத்தார் அனைவரும் இங்கிருப்பதால் அவர் இங்கு வேலை தேடுகிறாராம்.

மைத்துனர்: எல்லாம் அன்னை செயல்.

சிறியவன் : **Mother's Grace**.



கணவர் : Mother's Grace என்மூலமாக வருவதில் எனக்கு சந்தோஷம்.

பார்ட்னர் : என்னைப் பொருத்தவரை உங்கள் கணவர்தான் எனக்கு grace.

கணவர் : நீங்கள் எனக்குச் செய்தது பெரியது.

மைத்துனர்: நீங்கள் பெரியவர் அல்லவா?
அம்மா, Recruitmentஐப் பற்றிச் சொல்லுங்கள்.

தாயார் : நினைவு அங்கிருக்கும்வரை எல்லா postக்கும் நல்ல ஆட்கள் தானே அமையும்.

பார்ட்னர் : பணத்தைவிட ஆட்கள் முக்கியமாக இருக்கின்றனர்.

கணவர் : அதுதான் உங்களுக்குக் கவலை.

தாயார் : கவலைதான் கவலையைக் கொண்டுவரும்.
கவலையைவிட்டு அன்னையை ஏற்கவேண்டும்.

பார்ட்னரும், மைத்துனரும் போனபின் வீட்டினர் கலந்து பேசினார்கள்.

கணவர் : ஏண்டா, உன் கிண்டலெல்லாம் - Mother's Grace - பார்ட்னரிடம் காட்டலாமா?

பெரியவன் : அவன் என்னைக் கேலி செய்கிறான்.

பெண் : அம்மா, உடனே அதைக் கண்டியுங்கள்.

கணவர் : கண்டிப்பதா, இனி அப்படிப் பேசினால் தோலை உரித்துவிடுவேன்.

பிள்ளைகளும், கணவரும் போனபின் பெண்ணும் தாயாரும் பேசிக்கொள்கின்றனர்.

பெண் : நீங்க தம்பிக்குச் சொல்லணும்.

தாயார் : அப்பா, இப்படிப் பேசுவதும், தம்பி அப்படிப் பேசுவதும் ஒன்றே.

பெண் : என்ன செய்வது?

தாயார் : மதர்கிட்டே சொல்வது தவிர வேறு வழியில்லை.

அவர்கள் அனைவரும் போனபின் பெண் தாயாரை ஏன் நம் வீட்டில் அன்னை அவர்கள் வீட்டில் செயல்படுவதுபோல் செயல்படுவதில்லை எனக் கேட்டாள். அன்னைக்குரியது higher consciousness உயர்ந்த பண்புள்ள வாழ்வு. நம் வீடு அதற்கெதிரானது. அதனால் அன்னையின் அருள் நம் வீட்டுச் சூழலில் potential வித்தாக வந்து தங்கிவிடும். பலன் தாராது என்று தாயார் கூறினார்.

பெண் : Low conscious தாழ்ந்த பண்பு என எதைக் கூறுகிறீர்கள்?

தாயார் : போட்டி, பொறாமை, விட்டுக்கொடுக்காதது, பிறர் விஷயத்தை அறிய முயல்வது, குறுக்கே பேசுவது, சிறு விஷயங்களில் உள்ளம் மலர்வது, அழுக்கு, ஒழுங்கீனம், கோள் சொல்வது ஆகியவை. இத்தனையும் பொய்யிலிருந்து வருகின்றன.

பெண் : கிண்டல், கேலி, மனம் புண்படும்படிப் பேசுவது, சின்ன புத்தி அதில் சேருமா?

தாயார் : கொடுமை, கடுமை, அதன்மீது பாசத்தால் உறவு அனைத்தும் இதைச் சேர்ந்தவையே.

பெண் : நம் வீட்டில் பெரும்பாலும் இவை ராஜ்யம் நடத்துகின்றன. நாமென்ன அவ்வளவு மட்டமான குடும்பமா?



தாயார் : நாம் மட்டமானவர்கள் என்று அறியமுடியாத அளவுக்கு நாம் மட்டம்.

பெண் : விளக்கமாகச் சொல்லுங்களேன்.

தாயார் : பெரியவன் தம்பியைப் புண்படும்படிப் பேசுவான். திரும்ப தம்பி அதுபோல் பேசினால் தவறு என்பான். தான் பிறர்க்கு உரிமையுடன் செய்வதை, பிறர் நமக்குச் செய்வது அநியாயம் என்பது மட்டமான மனிதர் எண்ணம்.

பெண் : இதை விட்டு வெளிவர நமக்கு வழியேயில்லையா?

தாயார் : இருக்கிறது. நாம் செயல்படுத்த முடியாது.

பெண் : என்ன?

தாயார் : நம் நிலையை அறிந்து வெட்கப்பட வேண்டும்.

பெண் : நாம் பெருமைப்படுகிறோம்.

தாயார் : பிரச்சினை அதுவே. எதற்கு வெட்கப்படவேண்டுமோ அதற்குப் பெருமைப்படுபவன் மட்டமானவன். அவனுக்கு வழியில்லை.

பெண் : பார்ட்னரைப் பார்த்து நாம் திருந்திக்கொள்ளக் கூடாதா?

தாயார் : பார்ட்னர் அப்பாவை அன்பர் என்பதால், போற்றுவதால் நாம் எப்படித் திருந்த முடியும்?

பெண் : எனக்குச் சொல்லுங்கள்.

தாயார் : நம் செயல் automatic தானே நடக்கிறது. அறிவுக்குக் காத்திருப்பதில்லை. சமர்ப்பணம் ஆரம்பித்தால் ஓரளவு கட்டுப்படும். ஆழ்ந்து போனால் சமர்ப்பணம் எடுபடாது. நம் மனத்தின் ஆழம் (sensibility) எது என நாம்

அறிவோம். அங்கு சமர்ப்பணம் பலித்தால் வாழ்வு கட்டுப்படும்.

பெண் : தீவிரமான ஆசைகளுக்கு இடம் தரக்கூடாது என்கிறீர்களா?

தாயார் : அது ஆரம்பம். அடுத்தது ஆசை. அடுத்தது urges வேகம். அங்கு மனம், உயிர், உடலென கீழே போகப் போக ஆசையோ, வேகமோ கட்டுப்படாது. கட்டுப்படுவது சமர்ப்பணம்.

பெண் : அந்த ஆசைகள் ஜெயிப்பதே இலட்சியமாக இருக்கிறது இப்பொழுது. எனக்கு அதுபோல் ஆசை எழுந்தால் அடக்க முடியாது.

தாயார் : உயிர் நாடியான இடம் அதுவே. நாம் பெற்ற நாகரீகம் அதுபோன்ற ஆசைகளை வென்றதால்தானே.

பெண் : அதைப் பூர்த்தி செய்வது சமர்ப்பணம் பூர்த்தியாவதா?

தாயார் : ஆசை அழிந்தபின் அகந்தையிருக்கும். அது வேகமாக urges செயல்படும். அகந்தையைக் கட்டுப்படுத்துவது யோகம்.

பெண் : ஆசைக்கு உயிர் கொடுப்பது அகந்தையல்லவா? நான் என்ன செய்யலாம்?

தாயார் : அண்ணன், தம்பி பேசுவது எரிச்சலை உண்டு-பண்ணினால் உனக்கு அது ஆழத்தில் இருக்கிறது எனப் பெயர்.

பெண் : இவர்கள் செய்யும் அட்டூழியம் எரிச்சல் உண்டுபண்ணாமலிருக்க முடியுமா?



தாயார் : எரிச்சல் என்பது ஆழத்தில் நாம் அவர்களைப் போலிருக்கிறோம் என்பது.

பெண் : உங்களுக்கு, கோபம், எரிச்சல் வந்து நான் பார்த்ததில்லையே?

தாயார் : அளவுகடந்து வரும். அடக்கிக்கொள்வேன். வரும்வரை நாமும் அவர்கள் போலிருக்கிறோம்.

பெண் : அவர்கட்குப் புரிந்து மாற வழியில்லையா?

தாயார் : வெட்கம் எழுவது முதல் கட்டம். அல்லது நஷ்டம் வந்தால் யோசனை செய்வார்கள்.

பெண் : அமெரிக்காவில் credit card payment யாரும் தவறுவதில்லை. தவறினால் credit கிடைக்காது.

தாயார் : அதுபோல பெரிய இலாபமிருந்தால், தங்கள் நடத்தையால் அந்த இலாபத்தை இழக்கக்கூடாது என்றால், இவர்கள் மாறுவார்கள்.

இலாபத்திற்காக மாறுபவர் - உடலால் வாழ்பவர் - - physical
வெட்கத்திற்காக மாறுபவர் - உயிரால் வாழ்பவர் - - vital
தெளிவுக்காக மாறுபவர் - அறிவால் வாழ்பவர் - - mental

பெண் : அன்னை பக்தராகி அவருக்காக மாறலாமே.

தாயார் : மாறலாம்.

பெண் : நாம் எதுவும் செய்ய முடியாதா?

தாயார் : குறைப்படாமலிருக்கலாம். சொல்லித் திருத்தலாம் என நம்பாமலிருக்கலாம்.

பெண் : சொல்லித் திருத்த முடியாதா?

தாயார் : சொன்னால் பதில் வரும். வற்புறுத்திச் சொன்னால் குதர்க்கமான பதில் வரும்.

பெண் : சொன்னால் கெட்டுப் போகுமா?

தாயார் : சொல்லாமலிருக்க கட்டுப்பாடும், நினைக்காமலிருக்க பக்குவமும் வேண்டும்.

பெண் : நான் என்ன செய்ய?

தாயார் : எரிச்சல் வரும் பொழுது அன்னையிடம் **மட்டும்** சொல்.

பெண் : சொன்னால்?

தாயார் : எரிச்சல் வாராது.

பெண் : காரியம் நடக்குமா?

தாயார் : எரிச்சல் உற்பத்தியாகாமல் சந்தோஷம் எழுந்தால் காரியம் கூடிவரும்.

பக்கத்து வீட்டு அம்மாள் வந்தார். தம் கணவர் வெளிநாடு போவதாகச் சொன்னார். போனால் சம்பளம் பல மடங்கு மாறும் என்றார். அவர் மட்டும் போவதாகவும், தாம் போகவில்லை எனவும் சொன்னார். இவர்கட்கு பாக்டரி வந்துள்ள விஷயமோ, கார் வரப்போகிறது என்றோ பக்கத்து வீட்டிற்கு இன்னும் தெரியாது. நமக்கு வரும் அருளின் சாயல் பக்கத்து வீட்டிலும் தெரிகிறது என்று இவர் நினைத்தார். நம் விஷயம் தெரியாததால் பொறாமை எழ வழியில்லை. அதனால் அருள் செயல்படுவதாகவும் கருதினார். தம் கணவர் வெளிநாடு போனால் சீக்கிரம் கார் வாங்கிவிடுவோம் என, பக்கத்து வீட்டு அம்மா உற்சாகமாகப் பேசினார். கணவரிடமிருந்து தாமும் பார்ட்னரும் வருவதாகப் போன் வந்தது. கணவர் பார்ட்னருடன் பேசினாராம், ஏதோ முக்கியமான விஷயமாம். பதட்டமாகப் பேசினார்.



இருவரும் வருவதற்குள் பக்கத்து வீட்டு அம்மாள் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார். கணவர் பேயறைந்த முகத்துடனும், பார்ட்னர் கலகலப்பாகச் சிரித்துக்கொண்டும் வந்தனர். பெண் காபி கொடுத்தாள். கணவர் காப்பியைத் தொடவில்லை. பார்ட்னர் காப்பியைச் சாப்பிட்டுக்கொண்டே பேசினார். பெண்ணை விசாரித்தார்.

பார்ட்னர் : இன்று காலையில் காலேஜில் ஏதாவது விசேஷமுண்டா?

பெண் : ஒன்றும் குறிப்பாக இல்லை.

பார்ட்னர் கணவரைக் காப்பி சாப்பிடச் சொன்னார். கணவருக்குக் கை ஓடவில்லை.

பார்ட்னர் : அம்மா, ஒரு முக்கியமான விஷயம் தவறாகப் போய்விட்டது. அதனால் கம்பெனியில் அனைவரும் கலவரமுற்றுள்ளனர். நானும் அப்படித்தான் இருக்கிறேன்.

தாயார் : உங்களைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே?

கணவர் காப்பியைச் சிறிது சாப்பிட்டுவிட்டு வைத்துவிட்டார்.

கணவர் : எனக்குச் சேதி கேட்டதிலிருந்து வயிற்றைக் கலக்குகிறது. நீங்கள் காலேஜில் என்ன விசேஷம் என்று கேட்கிறீர்கள்.

பார்ட்னர் : மீதி காப்பியையும் சாப்பிட்டுவிட்டால் பிரச்சினை தீரும். ஒரு சிறப்பான தொழிலாளியை அதிக அனுபவம் உள்ளவனென்று வேலைக்கு வைத்தோம். கம்பீரமாக இருக்கிறான், தன்மையாகப் பேசுகிறான். நாங்கள் எல்லோரும் பிரியப்பட்டு அவனை எடுத்தோம்.

கணவர் : அவன் யூனியன் தலைவர். நம் கம்பனியில் யூனியன் ஆரம்பிக்க வந்திருக்கிறான். அது வயிற்றைக் கலக்குகிறது.

பார்ட்னர் : எனக்கும் அப்படித்தானிருக்கிறது. ஆனால் என்னை ஆண்டவன் ஒருபொழுதும் கைவிட்டதில்லை. அன்னையை அறிந்தபிறகு பயமாக இல்லை. முழு நம்பிக்கையிருக்கிறது. அன்னை வழியென்ன?

தாயார் : வழியிருக்கிறது. தானே போய்விடுவான். நாம் செய்தது தவறு என உணர்ந்து பிரார்த்தனை செய்தால் நிலைமை மாறும்.

பார்ட்னர் : கேட்க மனம் குளிர்கிறது. இன்று மாலை தியானத்தில் நான் அன்னையிடம் கூறுகிறேன்.

தாயார் : நம் தவற்றை ஏற்றபின் பிரச்சினை நொடியில் தீரும்.

கணவர் : பாரம் இறங்கியது போலிருக்கிறது. ஆனால் வயிறு கலங்குவது நிற்கவில்லை.

கம்பனியிலிருந்து கணவருக்குப் போன் வந்தது. யூனியன் தலைவருக்கு நம் கம்பனி பிடிக்கவில்லையாம். அவன் நண்பர்கள் வற்புறுத்தலால் வந்தானாம். ராஜினாமா செய்ய வேண்டும் என அவன் சகாக்களுடன் பேசுவதாகச் செய்தி.

கணவர் : இவற்றையெல்லாம் நம்ப முடியுமா? நாம் ஆர்டர் அடித்துக் கொடுத்துவிட்டோமே?

பார்ட்னர் : வழியிருக்கிறது என்றவுடன் இந்த நல்ல செய்தி வருகிறது. நாமிருவரும் தியானத்தில் பிரார்த்தனை செய்வோம். ஏன் பயப்பட வேண்டும்?

பார்ட்னர் மனைவியிடமிருந்து போன் வந்தது. பார்ட்னர் பேசினார். அந்த யூனியன் தலைவர் அவர் வீட்டிற்கு வந்து அவரைப் பார்க்க விரும்பினாராம். பார்ட்னரே அவருடன் பேசினார். அவருக்கு வேறொரு பெரிய கம்பனியில் வேலை கிடைத்துவிட்டதாம். அவர்களிடம் அவருடைய எதிரிகள் போய் அவன் யூனியன் தலைவர், எடுக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கின்றனர். அது பெரிய கம்பனி. இவன் கெட்டிக்கார டெக்னீஷியன். அங்கு இவன் கொட்டம் பலிக்காது. அவர்கள் எடுக்கப் பிரியப்படுகின்றனர். இவன் போகப் பிரியப்படுகிறான். எதிரிகள் இவனுக்கு வேலை ஆர்டர் வந்துவிட்டது என்று பெரிய கம்பனியில் கூறியதால், அவர்கள் பார்ட்னரிடமிருந்து கடிதம் எதிர்பார்க்கின்றனர். அதைக் கேட்க அவன் வந்திருக்கிறான்.



கணவர் : உடனே கடிதம் எழுதி, ஆர்டரைக் கான்சல் செய்யுங்கள்.

பார்ட்னர் : அன்னை சக்தி வாய்ந்த தெய்வம்.

தாயார் : மனமாற்றம் சூழலை மாற்றும், தவறாது.

பார்ட்னர் : இது எந்தப் புத்தகத்திலிருக்கிறது?

கணவர் : எந்த எந்தப் பிரச்சினைக்கு என்ன என்ன தீர்வு, எந்தப் புத்தகத்திலிருக்கிறது என்று எனக்கு எழுதிக் கொடு.

பார்ட்னர் : நாம் அவசரப்படக் கூடாது. முக்கியமாகப் பயப்படக் கூடாது.

கணவர் : இடி விழுந்தால், எப்படிப் பயப்படாமலிருக்க முடியும்?

தாயார் : அன்னை சொல்வதும் அதுவே. பயப்படக்கூடாது. மேலும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்கிறார்.

கணவர் : எப்படி சந்தோஷம் வரும்? பயம்தான் வரும்.

பெண் : அப்பா, பார்ட்னர் சந்தோஷமாக இல்லையா?

பார்ட்னர் : நமக்கு மேலே அன்னையிருக்கிறார் என்ற எண்ணம் சந்தோஷம் தருகிறது.

கணவர் : எனக்கு வரவில்லை, வாராது.

பார்ட்னர் : அம்மா, மேலும் இதைப் பற்றி அன்னை ஏதாவது கூறியிருக்கிறாரா?

தாயார் : வேண்டாதவனை நிச்சயமாக விலக்கலாம், திருவுருமாற்றலாம்.

பார்ட்னர் : அப்படி என்றால்?

தாயார் : அவனே சிறந்த தொழிலாளியாகி, மற்றவரைக் கட்டுப்படுத்துவான்.

பார்ட்னர் : விவரமாகச் சொல்லுங்கள்.

கணவர் : வேண்டாம், கேட்கவே பிடிக்கவில்லை. அது விஷப் பரிட்சை.

தாயார் : இது எப்படி நடந்தது?

கணவர் : நான் அவனைப் பார்த்தவுடன் இவனை விடக்கூடாது என நினைத்தேன். அமைதியாக இருக்கிறான். ரொம்ப தன்மையாகப் பேசுகிறான்.

பார்ட்னர் : எனக்கும் அவனைப் பார்த்தவுடன் பிடித்துவிட்டது. ஏன் கேட்கின்றீர்கள்?

தாயார் : முதலில் ஆர்டர் கொடுத்தபொழுது நடந்தவை பின்னால் வரப்போவதை விளக்கும்.

பார்ட்னர் : அப்படியும் ஒரு சட்டம் உண்டா? ஆர்டர் கொடுத்தபொழுது அமைதியாகப் பிரியப்பட்டுக் கொடுத்தோம்.

தாயார் : அப்படியானால், போவதும் அமைதியாகப் பிரியமாக நடக்கும்.



பார்ட்னர் : அது நடந்தேவிட்டதே. இதுபோன்ற அன்னை சட்டங்களை நான் தெரிந்துகொள்ளப் பிரியப் படுகிறேன்.

கணவர் : அதெல்லாம் அப்புறம். அவன் ஆர்டரை வாங்கிக் கொண்டு கடிதம் எழுதி அவனை முதலில் அனுப்புங்கள்.

அனைவரும் கலைந்தனர்.

பெண்ணின் கல்லூரி ஆசிரியை வீட்டிற்கு வந்தார். பெண்ணை வீட்டில் வந்து பார்க்கும் ஏற்பாடு கல்லூரியில் உள்ளது.

ஆசிரியை : உங்கள் மகளை என்ன செய்வதாக உத்தேசம்? மேற்படிப்புக்கு அனுப்பப் போகிறீர்களா?

தாயார் : அவளுக்குப் படிக்க இஷ்டம். அவருக்கு B.A. போதும் என்றபிப்பிராயம். கல்யாணம் ஆகும்வரைப் படிக்கலாம் என நான் நினைக்கிறேன். எப்படியாகுமோ தெரியவில்லை.

பெண் : நான் M.A. முடித்துவிட்டு கல்யாணம் செய்து கொள்கிறேன் அம்மா.

ஆசிரியை : பெரிய படிப்புக்குப் பெரிய மாப்பிள்ளை தேடவேண்டும். அதுவும் சரிதான். மேல்நாட்டிற்கு அனுப்பும் யோசனை உண்டா?

தாயார் : அவர் எதுவும் சொல்லவில்லை.

ஆசிரியை : உங்களுக்கு அபிப்பிராயம் என்ன? அவரைக் கேட்கவில்லையா?

பெண் : மேடம், என் தாயார் அன்னை பக்தை. அதனால் அப்பாவை எதுவும் கேட்கமாட்டார்.

ஆசிரியை : அன்னையைத் தெரியுமா? எனக்கும் அன்னை தெரியும். அதனால் கேட்கக் கூடாது என்று சட்டமில்லை.

பெண் : அப்பாவாக உங்களிடம் தம் அபிப்பிராயத்தைக் கூறியதில்லையா?

ஆசிரியை : ஏன் கேட்கக் கூடாது என நினைக்கிறீர்கள்? நான் அன்னையை வெகுநாட்களாக அறிவேன். எது வேண்டுமானாலும் கேட்பேன். அப்படியே பலிக்கும்.

தாயார் : முழு நம்பிக்கை இருப்பதாக அர்த்தம்.

ஆசிரியை : உங்கள் அபிப்பிராயம் தெரியப் பிரியப்படுகிறேன்.

தாயார் : எதையும் கேட்கலாம் என்ற அன்னை, எதையும் கேட்காமலிருப்பது நல்லது எனவும் கூறியிருக்கிறார்.

ஆசிரியை : அன்னை கூறியவற்றை எல்லாம் நம்மால் அப்படியே பின்பற்ற முடியுமா? திருமணம் கூடாது என்கிறார். பெண்ணுக்குத் திருமணம் வேண்டாம் எனக் கூற முடியுமா?

தாயார் : நான் தாயாரானாலும், முடிவுக்கு உரியவர் இரண்டு பேர். கணவர் முடிவு செய்ய வேண்டியவர். பெண் பக்தையானால் அவள் முடிவு செய்யவேண்டும்.

பெண் : அம்மா, நான் பக்தையில்லையா?

தாயார் : நீயும், நானும் பக்தை எனக் கூறுவது தவறானது.

ஆசிரியை : ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?

தாயார் : நான் பிரார்த்தனை செய்கிறேன். சமர்ப்பணம் செய்ய முடிவதில்லை. சமர்ப்பணம் செய்பவர் பக்தராவார்.

ஆசிரியை : உங்கள் கணக்கில் நானும் பக்தையாகமாட்டேனா?



தாயார் : அன்னையை ஏற்பதில் பல அளவுகள் உண்டல்லவா?

ஆசிரியை : என்னை எந்த அளவில் வைக்கின்றீர்கள்?

தாயார் : எனக்குப் பொதுவான சட்டம் தெரியும்.

பெண் : எந்தச் சட்டம்?

தாயார் : அன்னை பக்தை என்பவர் அன்னை கூறியவற்றை ஏற்பவர்.

பெண் : நான் ஏற்கவில்லையா? நீங்கள் அப்படியே பின்பற்றுகிறீர்களே?

தாயார் : உன் ஆசிரியைச் சொற்படி நாம் அன்னையின் திருமணச் சட்டத்தை ஏற்க முடியுமா?

ஆசிரியை : ஒருவேளை நீங்கள் சாதகருக்குண்டானதைப் பற்றிப் பேசுகிறீர்கள் போலிருக்கிறது.

தாயார் : சாதகருக்கு விலக்கேயில்லை. எந்தச் சட்டத்திலும் விலக்கை அவர் எதிர்பார்க்கக் கூடாது.

ஆசிரியை : அன்னை எழுதியவற்றை எல்லாம் படித்திருக்கிறீர்களா?

தாயார் : ஊம்.

ஆசிரியை : பின்பற்றப் பிரியப்படுகிறீர்களா?

தாயார் : ஓரளவு, முடிந்த அளவு பின்பற்றுகிறேன்.

பெண் : அம்மா, அன்னையை ஏற்பது என்றால் என்ன?

தாயார் : அன்னை சொல்லியதை அப்படியே வேதவாக்காக ஏற்க வேண்டும்.

ஆசிரியை : அது படிக்காதவர்கட்குரியது, மூடநம்பிக்கை. நாமெல்லாம் புரிந்து ஏற்கவேண்டும்.

பெண் : அம்மா, மேடம் சொல்வது சரியில்லையா?

தாயார் : புரியாமல் ஏற்பதைவிடப் புரிந்து ஏற்பது மேல்.

ஆசிரியை : அதையே நான் சொன்னேன்.

பெண் : இரண்டு பேரும் ஒன்றையே கூறுகிறீர்களா? எதிரானதைச் சொல்கிறீர்களா?

தாயார் : புரியாமல், புரிந்துகொள்ள முயலாமல் ஏற்பது முதல் நிலை. புரிந்து ஏற்பது அடுத்த நிலை. புரிந்தபின், புரிந்ததற்காக ஏற்காமல், அன்னை கூறியிருப்பதற்காக ஏற்பது அடுத்த நிலை.

ஆசிரியை : எப்படி?

தாயார் : புரியாமல் ஏற்பது உணர்வு ஏற்பது (vital acceptance). புரிந்து ஏற்பது மனம் ஏற்பது (mental acceptance). புரிந்தாலும் அன்னை கூறியதால் ஏற்பது சைத்தியப்புருஷன் ஏற்பது (psychic acceptance).

ஆசிரியை : நீங்கள் அன்னையைப் படித்ததுடன், அதிகமாக யோசனை செய்திருக்கிறீர்கள். எங்கள் வீட்டில் மாதம்தோறும் சுமார் 10, 20 அன்பர்கள் கூடுகிறோம். அங்கு வந்து இக்கருத்தை விளக்கிக் கூறினால் அனைவரும் வரவேற்பார்கள். அவர்கள் கேள்விகட்குப் பதில் சொல்வதும் நன்றாக இருக்கும். நமது மரபில் இதைப் பற்றி ஏதாவது கூறியிருக்கிறார்களா?

தாயார் : மரபைப் பற்றி நமக்கு விவரமாகத் தெரிந்துகொள்ள வழியில்லை. பொதுவாக குரு கூறுவதை மறுத்துப் பேசக்கூடாது. நினைக்கவும் கூடாது என்ற பழக்கம்



தெரியும். உபநிஷதம், சாஸ்திரம் அப்படிக் கூறும் என நான் நினைக்கவில்லை. எனக்கு அந்தப் படிப்பில்லை.

ஆசிரியை : அன்னை என்ன கூறுகிறார்கள் என்று படித்திருக்கிறீர்களா?

தாயார் : **1. மனித குரு தேவையில்லை.**

**2. குருவைக் கேள்வியே கேட்கக் கூடாது.**

**3. குரு கூறுவதைப் புரிந்துகொள்ள வேண்டும்.**

**4. புரிவது அவசியம்.**

**5. புரிவதை நம்பினால் நம்மை நம்புவதாக அர்த்தம்.**

**6. புரிந்தபின், புரியாமல் ஏற்பதுபோல் ஏற்பது பக்குவம்.**

ஆசிரியை : ஏன் அது பக்குவம் எனக் கூற முடியுமா?

தாயார் : புறம் அகமாவது சத்திய ஜீவியம். புரிவது புறம். புரியாததும் புறம். வேதவாக்காக ஏற்பது அகம். இந்த அகம் புறத்தைத் தன்னுட்கொண்டது என்பதாலும், காலத்தின் புறத்தையும், காலத்தைக் கடந்த அகத்தையும் கடந்த நிலையிலுள்ள காலம் என்பதால், அது உயர்ந்தது.

ஆசிரியை : எனக்குப் புரியவில்லை. இது எங்குள்ளது?

தாயார் : The Life Divineஇல் 364ஆம் பக்கத்திலுள்ளது.

ஆசிரியை : எனக்குப் புரிவதுபோல் சொல்ல முடியுமா?

பெண் : எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

தாயார் : காலம், காலத்தைக் கடந்தது என்ற இரண்டு நிலைகள் உள்ளன.

ஆசிரியை : ஆம். காலம் சிறியது. கடந்தது பெரியது.

தாயார் : இரண்டையும் கடந்த காலம் உண்டு. காலம் வாழ்வுக்குரியது. கடந்தது ரிஷிக்குரியது. இரண்டையும் கடந்தது பூரண யோகத்திற்குரியது. பூலோகச் சுவர்க்கம் எனப்படுவது.

ஆசிரியை : துறவறத்தின் தூய்மையுள்ள இல்லறம் என்பது அதுதானா?

தாயார் : ஆம். அந்த 3 நிலைகளில் புரிவதை வைத்துக் கூறினேன்.

ஆசிரியை : அதிகமாக யோசனை செய்திருக்கிறீர்கள். இது படிப்பால் வாராது. யோசனை அனுபவத்தால்தான் வரும். நானும் என் தோழிகளும் ஒரு நாள் இங்கு வருகிறோம். உங்களுடன் பேச நன்றாக இருக்கிறது.

ஒரு நாள் பல ஆசிரியைகள் பெண்ணின் ஆசிரியையுடன் வந்தனர். அன்று அனைவரும் பெண்ணின் ஆசிரியையை வாழ்த்தினார்கள். அவர்களுக்குப் பிரின்சிபால் வேலை வந்துவிட்டது. பிரின்சிபால் பேசினார்கள். அனைவரையும் கேள்விகள் கேட்கச் சொன்னார்கள். அவர்கள் எல்லாம் முதலில் பிரின்ஸ்பாலுடைய அனுபவத்தையும், பிறகு பெண்ணின் தாயாரை அன்னையைப் பற்றியும் பேசச் சொல்லிக் கேட்டார்கள்.

பிரின்ஸ்பால்: நான் இப்பெண்ணைப் பார்க்க வந்தபொழுது அவள் தாயார் அன்னை பக்தை என அறிந்து, பேச ஆரம்பித்தேன். அன்று அவர்கள் கூறியதை அப்படியே மனதில் ஏற்றுப் பின்பற்றினேன். மனம் நிம்மதியாயிற்று. புது வாழ்வு பிறந்தது போலிருந்தது. அதுவரை நான் அன்னையை அறியாதது போலிருந்தது. எனக்கு பிரமோஷன் தற்சமயமில்லை. எப்படி வந்தது எனத் தெரியவில்லை. நீங்கள் எல்லாம் சில புத்தகங்களை படித்திருக்கிறீர்கள். தோன்றும் சந்தேகங்களைக் கேட்டால் அம்மா மிகத் தெளிவாக விளக்கம் தருவார்.

வரலாறு ஆசிரியை : Life Response என்பது மிகச் சிறப்பாக உள்ளது. வரலாற்றிலிருந்து உதாரணம் தரமுடியுமா?

தாயார் : வரலாறு முழுவதும் Life Responseதான். அந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் புரியும். 3 இலட்சம் பிரிட்டிஷ் துருப்புகள் டங்கர்க்கில் உள்ளபொழுது, ஹிட்லர் அங்கு குண்டு போட முடிவு செய்தான். போரின் போக்கு பிரிட்டன் பின்வாங்கும் நிலை. குண்டு போட்டால் அத்தனை பேரும் சேதமாவர். திடீரென 7 நாட்கள்வரை மூடுபனி விமானம் வருவதைத் தடுத்தது. அது Life Response. உலகப்போரில் முக்கியத் திருப்பம்.

வரலாற்று ஆசிரியை : அது உலகப் பிரசித்தி பெற்ற நிகழ்ச்சி.

தாயார் : நாம் Life Responseஐ உண்டுபண்ணலாம். இது பகவான் செய்தது.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பொழியும் அருள் மலை போன்ற சக்தியை அளித்து, தீயசக்திகளை நாசம் செய்ய உதவுகிறது.

## p.41 The visage marked by superconscient Sleep.

**சமாதி லயத்திரையின் தூக்கம் மூடிய உருவம்**

- **மூடிய கண்கள் காணும் மூவுலகம்.**
- **லயத்தில் கட்டிடம் கட்டும் மயனது தோற்றம்.**
- **சூன்யத்தில் உதித்த ஆசையில் ஆதி ரூபம் எட்டிப் பார்த்தது.**
- **அழியாத நம்பிக்கை அவன் திருஷ்டியில் பட்டது.**
- **காலத்தின் வேகத்தில் கடக்கும் கர்மத்தை ஓடிப்பிடிக்கும் பாதங்கள்.**
- **முடிவில்லாத கனவின் மூலமறியாத முக்கியம்.**
- **இறைவனின் வலிமையை எடுத்துயர்த்தும் தீவர்த்தி.**
- **அழியாத சத்தியத்தின் அற்புத ஜோதி.**
- **இரவின் எல்லையில் ஒளிவிடும் மங்கிய நட்சத்திரம்.**
- **தெய்வீக பொன்மயமான பளபளக்கும் எல்லை.**
- **திருட்டுத் திரையூடே பிடிபட்டது போன்றது.**
- **நெடுநாட் காதலை ஏற்கும் புன்னகை.**
- **தாயின் முலைகளின் தணியாத அன்பு.**
- **குழவியின் சிரிப்பு தரும் விவேகமான சந்தர்ப்பம்.**
- **அனந்தனின் சக்திக்கு மௌனம் எனும் தாதி.**
- **இறைவனின் இரகஸ்யம், அமரத்துவத்தின் கருவான சொல்.**
- **காலத்தைக் கடந்தவனின் கருத்துத் தோய்ந்த முகம்.**
- **பிரம்மத்தின் சிருஷ்டிக்குரிய பார்வை.**



- **மனித இதயத்துள் நுழைந்த தெய்வீக மாது.**

நாம் உலக வாழ்வை மனிதனாக அனுபவிக்கிறோம். அது புல்லை மட்டும் தின்று உயிர் வாழும் மாடு போன்றது. வெறும் புல்லை மட்டும் தின்னும் மாட்டிற்கு நம்மைப்போல் எத்தனை மடங்கு பலம் உள்ளது. பலம் எங்கிருந்து வருகிறது? மாடு காட்டில் தின்ன புல், தழை தவிர எதுவுமில்லை. புளிய மரம் என்ன உரமாக இருக்கிறது. அது சாப்பிடுவது என்ன? அதற்கெப்படி அத்தனை வலு வந்தது? யானை பலம் என்கிறோம். அது பெரிய உருவம். அபார பலம். சாப்பிடுவது தழை என்றாலும், தழை எனும் பிரம்மம் அது என்பதால், யானை எனும் பிரம்மம் தழை என்ற பிரம்மத்தால், பிரம்மாவால் நிர்ணயிக்கப்பட்ட பலத்தைப் பெறுகிறது. மனம் எனும் திரையில்லாததால் பிரம்மம் பிரம்மத்தில் பிரம்மமாகச் செயல்படுகிறது. மேற்கூறிய பகுதிகள் - வரிகள் - மனம் திரையிடுவதையும், மனம் விலகி பிரம்மாற்புதத்தைக் காண்பிப்பதையும் குறிக்கின்றன. பிரம்மம் அனந்தம், அற்புதம், ஆச்சரியம், அனைத்தையும் தன்னுட்கொண்டது. நாமும் பிரம்மம், தடை மனம். மனம் மட்டுமே மனிதனுக்குத் தடை.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதத் திறமைக்கு முழுப்பலன், சந்தோஷம் பொங்கி வழியும்பொழுதுதான் கிடைக்கும். மனச்சாட்சியின் தயக்கமிருக்கும்வரை பொங்கி வழியும் சந்தோஷத்திற்கு அது தடை செய்யும்.

*பெரிய சந்தோஷத்திற்கு மனச்சாட்சி தடை.*

## பிரம்மம், புருஷா, ஈஸ்வரா - மாயா, பிரகிருதி, சக்தி

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

*(இராணிப்பேட்டை தியான மையத்தில் 15.8.2003 அன்று திருமதி. வசந்தா லக்ஷ்மி நாராயணன் நிகழ்த்திய உரை)*

கடவுள் கனவில் காட்சி அளித்தால் அந்தராத்மாவின் குரல் நமக்குத் தெரிந்தால் கடவுள் ஜோதிமயமாக மனரூபத்தில் தெரிகிறார். அந்தராத்மாவின் குரல் தமிழில் கேட்கிறது. அதனால் கடவுளின் உருவம் மனிதனின் உருவம் என்று ஆகாது. அவர் உருவமே இல்லாதவர். கடவுளின் தாய்மொழி தமிழ் என்றாகாது. இறைவன் மோனத்தில் இருப்பவன். அவர் நம்மைப்போல் இருப்பார் என்று நாம் வைத்துக்கொள்வதால் தரிசனம் மனித உருவில் தெரிகிறது. நமக்குத் தமிழ்தான் தெரியும் என்பதால் அவர் நம்மிடம் தமிழ் பேசுகிறார். மனிதன் தன்னைப்போல் மற்றவற்றை நினைப்பதால் தனக்குத் தெரிந்தது பிறருக்குத் தெரியும் என்று வைத்துக்கொள்கிறான். தனக்குத் தெரியாதது பிறருக்குத் தெரியாது என்று வைத்துக்கொள்கிறான். அது மனிதர்களிடையே உண்மை இல்லை என்று தெரியும். ஆனால் நம் அறிவிற்கு எட்டாதது ஆண்டவனின் அறிவிற்கு எட்டாது என்று கூறுகிறார்கள். நடைமுறையில் அவர்கள் அப்படிச் சொல்வது இல்லை. நம் அறிவிற்கு எட்டாததை இல்லை என்றும், மாயை என்றும் கூறுகிறார். நமக்குப் புரியாத விஷயங்கள் உலகில் இருக்கலாம் என்று மனிதன் ஏற்பது இல்லை. யானையைப் பார்த்த குருடர்கள் தூண்போல் இருக்கிறது, சுவர்போல் இருக்கிறது, கயிறுபோல் இருக்கிறது என்றனர். அடுத்த கட்டத்திற்கும் போய் தூண்போல்தான் இருக்கிறது, சுவர்போல் இல்லை என்றும் கூறினர். இன்றுவரை உலகம் கூறுவது அதுவே. தூணாகவும், சுவராகவும், கயிறாகவும் இருக்கலாம் என்று மனிதனுக்குத் தோன்றவில்லை.



அவை எல்லாம் சேர்ந்த ஒன்றாக இருக்கவும் கூடும் என்று இன்றுவரை மனித அறிவிற்கு எட்டவில்லை.

ஆத்மாவைப் பொருத்தவரையில் மனிதன் பிறவிக் குருடனாக இருக்கிறான். பிறவிக் குருடனுக்குக் கண் கொடுப்பது ஸ்ரீ அரவிந்தம். அந்தக் கண்ணின் பெயர் சைத்தியப்புருஷன். மனிதன் இக்கண்ணைப் பெற பல ஆயிரம் ஆண்டுகள் ஆகும் என்ற ஸ்ரீ அரவிந்தர் அதை உடனேயும் பெறலாம் என்றும் கூறினார். அவர் கருத்து, பகவான் ஸ்ரீ அரவிந்தர்மீது முழு நம்பிக்கையும் பக்தியும் உள்ளவர், பூரணச்சரணாகதியை மேற்கொண்டால், ஸ்ரீ அரவிந்தருடைய கொள்கை அன்னையின் அருளாக உடனே பலித்துவிடும் என்றும், நமக்கு அவரே கொடுத்துவிடுவார் என்றும் கூறவில்லை. ஆனால் அதுவே உண்மை. இந்த உண்மையின் தத்துவ அம்சத்தை இந்த அத்தியாயத்தில் கூறுகிறார்.

36 வகைகளாக பிரம்மத்தைப் பகுதியாக விவரித்தாலும் 36 பகுதிகளும் ஒன்றாகப் பார்க்கும்பொழுது மனத்தில் அவை ஒன்று சேர்ந்தால் அந்த நேரம் இறைவன் இதயத்தில் எழும் தருணம். ஏன் இந்தப் பகுதிகள் முழுமையாகவில்லை? மனித மனத்தின் குறை என்ன? அந்தக் குறையை நிறை ஆக்குவது எப்படி? என்பவற்றை 15 வகைகளாகக் கூறுகிறார்.

வாழ்வு முழுமையானது. வாழ்வை முழுமையாக ஏற்றுக்கொள்ளாமல் வாழமுடியாது. பகுதியான மனிதன் முக்கியமான நேரங்களில் தன் பகுதியான பழக்கவழக்கங்களை விட்டு வாழ்வின் முழுமையை ஏற்றுக்கொள்வதை நாம் அறிவோம். ஆனால் அதை அப்படிப் புரிந்துகொள்வது இல்லை. பள்ளிக்கூடம் போகாத குழந்தையைக் கண்டிக்கவும், படித்துவிட்டு வேலைக்குப் போகமாட்டேன் என்ற பையனை வேலைக்குப் போக நிர்ப்பந்தம் செய்வதும், கையில் பணம் வந்தபிறகு தறுதலையாகச் சுற்றுபவனை வீடும், ஊரும் வற்புறுத்தித் தடுப்பதை நாம் அறிவோம். வாழ்வின்

முழுமையை ஏற்றுத் தன்னை அதற்குக் கட்டுப்படுத்திக்கொள்வது மனிதன்.

ஆத்மாவின் முழுமையை அறியமுடியாதபோது அறியாமையால் ஆத்மாவை மனிதனாக மாற்றி ஏற்றுக்கொள்கிறோம். அப்படி மாறும் இடங்கள் ஏராளம். அந்த இடங்களில் எது அறிவு, எது ஞானம் என்று பிரித்து அறிவை எப்படி ஞானத்திற்கு உட்படுத்துவது, அப்படி உட்படுத்தினால் ஞானம் ஆத்ம ஞானமாகி ஆத்மா மனதைத் திறந்து பிரம்மம் வெளிப்பட்டு நாமே பிரம்மம் என்று அறிந்து பிரம்மம் ஆத்மாவில் சித்திக்கும். பூரணயோகத்தில் அது முதல் சித்தி. ஆத்மாவில் சித்தித்த பிரம்மம், மனத்திலும் வாழ்விலும் சித்தித்து, உடலையும் அது ஏற்றுக்கொண்டால் பூரணயோகம் பூர்த்தி பெறும். அறிவு ஞானத்தின்மூலம் ஆத்மதரிசனம் பெறும் அம்சங்கள் நிறைந்தது இந்த அத்தியாயம்.

ஒரு நிகழ்ச்சி நடந்தால் அதைச் சுற்றிப் பல விஷயங்கள் இருக்கும். அந்த விஷயங்கள் தங்களைப் பூர்த்தி செய்துகொள்ள முயலும். அந்த விஷயங்கள் நம் கண்ணெதிரே இருந்தாலும் கண்ணில்படாது. அவை இரு வகையானவை என்கிறார் பகவான். ஒன்று அரைகுறையானவை, பூர்த்தியை நாடுவது அடுத்தது. பூர்த்தியான சிறியவை பெரியதாகப் பூர்த்தியாக முயலும். அவை நம் கண்ணில் படுவது இல்லை. நிகழ்ச்சியே முழுவதும் கண்ணில் படாது என்கிறார் பகவான். நிகழ்ச்சியின் பலன் மட்டும் படும் என்கிறார். இதை Pride and Prejudice என்ற கதையில் காணலாம். நெதர்பீல்ட் டான்ஸ் என்பது ஒரு நிகழ்ச்சி. அங்கு வந்தவர்களுக்கு அந்த டான்ஸ் தெரிகிறது. அதைச் சுற்றி என்ன நிகழ்ச்சிகள் இருக்கின்றன? எப்படி நடக்கின்றன? என்று பார்ப்போம்.

1. *Mrs.* பென்னட்டிற்கு தன் முதல் இரண்டு பெண்களும் பிங்கிலி, காலின்ஸைத் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று அபிப்பிராயம்.



2. எலிசபெத்திற்கு விக்காமை பார்த்து அவனைத் திருப்தி செய்யவேண்டும் என்பது நோக்கம்.
3. இந்த டான்ஸிற்குப் போனால் தன் சாயம் வெளுத்துவிடும் என்பது விக்காமின் அபிப்பிராயம்.
4. சார்லஸ் லூக்காசிற்கு ஊருக்கு வந்துள்ள பெரிய மனிதர்களை மரியாதையாக நடத்தவேண்டும் என்பது முக்கியம்.
5. டார்சி, எலிசபெத்துடன் டான்ஸ் ஆடி அவள் மனதை மாற்றவேண்டும் என்று நினைக்கிறான்.
6. கரோலின் பிங்கிலிக்கு டார்சியும் எலிசபெத்தும் நெருங்கக்கூடாது என்று அபிப்பிராயம்.
7. லிடியாவிற்கும் கிட்டிக்கும் *officer*களைச் சந்திக்கவேண்டும் என்பது நோக்கம்.
8. மேரிக்குப் பாடுவது முக்கியம்.
9. *Mr.* பென்னட்டிற்குத் தன் குடும்பம் அவமானப்படாமல் இருக்கவேண்டும் என்பது அவசியம்.
10. ஜேன் தனக்கு பிங்கிலி மீது இருக்கக்கூடிய அபிப்பிராயத்தைக் காட்டிக்கொள்ளக் கூடாது என்று நினைக்கிறாள்.

இவை எல்லாம் உண்மை, ஆனால் பகுதிகள். இந்தப் பகுதிகளைக் கொண்டு நாம் மற்றப் பகுதிகளையோ, முழுமையையோ அறிந்துகொள்ள முடியாது.

மனிதனுக்கு மனத்தில் இரு நிலைகள் உண்டு என்று ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார். கோளவடிவமான பூமியில் நாம் நிற்கும்போது செங்குத்தாக நிற்க முடியாது. தரைமட்டமாகத்தான் நிற்கமுடியும் என்று தெளிவாகத் தெரிகிறது. ஆனால் நாம் நடக்கும்போது தரைமட்டமாகத்தான் இருக்கிறோம் என்று கற்பனை செய்யமுடியவில்லை. செங்குத்தாக நடக்கிறோம், ஓடுகிறோம்.

தண்ணீரிலுள்ள பென்சில் உடைந்து தெரிகிறது, அதை எடுத்துப் பார்த்தால் உடையாமல் தெரிகிறது. உடையவில்லை என்று அறிவிற்குத் தெரிந்தாலும் கண் உடைந்ததாகக் காண்கிறது. தென் துருவத்திலுள்ள மனிதன் தலைகீழேதான் நிற்கிறான் என்றாலும் அதை அவன் அறிவு தெளிவாகப் புரிந்துகொண்டாலும் கண் உடைந்த பென்சிலைக் காண்பதுபோல் மனம் அவன் செங்குத்தாக நடப்பதாகக் கூறுகிறது. மனம் அதிக வருத்தம், கவலை இருந்தாலும் பிறரிடம் அதைக் காண்பிக்காமல் நடந்துகொள்ளும் நேரம் உண்டு. நாம் கலந்துகொள்ளும் விசேஷம் பெரியதானால் அதன் ஈடுபாடு நமக்கு முழுமையானால் நமக்கே நம்முடைய கவலை மறந்துவிடுவதும் உண்டு. **கவலை இருப்பது உண்மை. மறந்ததும் உண்மை.** அதுபோல் ஒரு நிலையில் முழுவதும் மறந்து அடுத்த நிலையில் மனிதனால் நடக்கமுடியும்.

ஜோஸ்யம் என்ற சாஸ்திரமே வான சாஸ்த்திரத்திற்குத் தலைகீழே எழுதியது. அதனால் பெரும்பாலான விஷயங்களைக் கூறமுடிகிறது. மனிதனுக்கு மனத்தில் இரு நிலைகள் இருந்தாலும் ஒன்றை அறவே மறந்து அடுத்த நிலையால் சிறப்பாக நடக்கமுடியும் என்பவற்றிற்கு மேற்கூறியவற்றை உதாரணமாகக் கூறுகிறார். வாழ்வு, தவம், ஸ்ரீ அரவிந்தம் என்ற மூன்று நிலைகளில் வாழ்வு (புறம்), தவம் (அகம்), ஸ்ரீ அரவிந்தம் (புறத்தின் அகம்). மனிதன் வாழ்வில் இருக்கிறான். துறவி அகத்தில் இருக்கிறார். பூரணயோகத்தை மேற்கொண்டவன் புறத்தின் அகத்தில் இருக்கவேண்டும். புறத்தின் அகத்தில் இருக்கும்போது மனிதன் ஒரே சமயத்தில் புறத்திலும் அகத்திலும் இருப்பான். இரு நிலைகளிலும் ஒரே சமயத்தில் இருக்க மனிதனால் முடியும். அப்படி இருக்கின்றவனுக்கு பிரம்மத்தின் முழுமை தெரியும்.

பூரணயோகம் மனிதனுக்கு இந்த இரு நிலைகளையும் தருகிறது.

1. (*Double consciousness*).



2. மனிதன் மனத்தில் வாழ்கிறான். மனத்தின் ஆதி சத்தியஜீவியம். மனத்திற்கு உரியது ஒரு நிலை, சத்தியஜீவியத்திற்கு உண்டானவை பல நிலைகள். மனத்தின் ஆதியைக் கண்டால் சத்தியஜீவியத்தை அடையலாம். அத்திறனை பூரணயோகம் கொடுக்கிறது.
3. நம் ஐந்து புலனுக்கும் உள்ள மையங்கள் மனத்திற்கு உண்டு. உடல் உயிருக்கு உள்ள மையங்களும் உள்ளன. ஆனால் சத்தியஜீவியத்திற்கு உண்டான மையம் ஜீவனில் இல்லை. அதை இனி உற்பத்தி செய்யவேண்டும். அதை உற்பத்தி செய்யும் திறனை பூரணயோகம் பெறுகிறது.
4. சிறிய ஊர், பெரிய ஊர்களிலுள்ள *office* சர்க்காரின் *branch office*. அதிகாரம் *branch office*இல் இல்லை. அதிகாரம் தலைமை *office*இல் இருக்கிறது. புலன்கள், உடல் உறுப்புகள், உயிர், மனம் ஆகியவை பகுதிகள். ஆண்டவன் எந்தப் பகுதியிலிருந்தும் செயல்படவில்லை. ஆண்டவன் முழுமையிலிருந்து செயல்படுகிறான். முழுமைக்குரிய மையம் சத்தியஜீவியம். அதன் இன்றைய உருவம் சைத்தியப்புருஷன். பூரணயோகம் பகுதியிலிருந்து முழுமைக்குப் போகும் திறன் அளிக்கிறது.
5. முழுமை இருந்தாலும் முழுமையைப் பார்க்கும் அறிவு இருக்காது. நாம் அறிவு இருந்தாலும் அறிவை உபயோகப்படுத்தாமல் செயல்படுகிறோம் அல்லவா? அதேபோல் முழுமை வந்தபிறகு அதைப் பார்க்க நமக்குத் தோன்றவில்லை. பார்வையைப் பகுதியிலிருந்து மாற்றி முழுமைக்குச் செலுத்தும் திறனைக் கொடுப்பது இந்த யோகம்.
6. நாம் காலத்தில் பிரகிருதியில் இருக்கிறோம். முழுமை காலத்தினுள் கடந்ததில் இருக்கிறது. மேல்மனத்திலிருந்து காலத்தைக் கடந்து அடிமனத்துள் கடந்த நிலையை அடையும் திறனை பூரணயோகம் தருகிறது.
7. சித்திலிருந்து சக்தி பிரிந்து சக்தி உலகமாக இயங்குகிறது. பரிணாமத்தால் சக்தி உயர்ந்து சென்று மீண்டும் சித்துடன்

இரண்டறக் கலக்க வேண்டும். இதைச் செய்யும்பொழுது தனி மனிதனுடைய உலகம் பிரபஞ்சம் முழுவதும் பரவுகிறது. பூரணயோகம் அதைச் செய்யும்.

8. மனிதன் மேல் மனத்தில் காலத்தால் கட்டுண்ட மனத்துள் சிறியவனாக இருக்கிறான். இதை நிர்வாகம் செய்வது அகந்தை. அகந்தையிலிருந்து வெளிவந்து அதன்மூலம் காலத்தையும், மனத்தையும் கடந்து பிரபஞ்சம் முழுவதும் பரவுவதால் உள் மனத்தைக் கடந்து அடி மனத்திலுள்ள சைத்தியப் புருஷனை அடையவேண்டும். இது பூரணயோகத்தின் சுருக்கம்.

   மேல் மனம், உள் மனம், அடி மனம் என்பவை அடுக்கடுக்காக உள்ளன. சைத்தியப் புருஷனை வெளிப்படுத்துவது இந்த யோகம். அவன் அடி மனத்தில் ஒரு குகைக்குள் ஒளிந்துள்ளான். மேல் மனத்தின் அம்சங்கள் ஐந்து, 1. மேலெழுந்தவாரியானது 2. அகந்தை 3. மனம் 4. காலம் 5. சிறியது.

   அகந்தை மேல் மனத்திற்குரியது.

   சைத்தியப்புருஷன் பிரபஞ்சத்திற்குரியது.

   அகந்தையிலிருந்து விடுபட்டால், பிரபஞ்சம் முழுவதும் நாம் பரவுகிறோம். மனம் காலத்தால் கட்டுண்ட சிறியது. மனத்தையும், காலத்தையும் கடந்தால் சிறியதான அகந்தை விரிந்து அழிந்து பிரபஞ்சம் முழுவதும் பரவும். இதைச் செய்வது சமர்ப்பணம். சமர்ப்பணத்தால் அகந்தையை அழித்து மனத்தையும் காலத்தையும் கடந்து பெரியதாகி மேல் மனத்திலிருந்து உள்மனம் வழியாக அடிமனத்தையும் அதன் குகையில் உள்ள சைத்தியப்புருஷனையும் அடைவது பூரணயோகச் சுருக்கம்.

9. பூரணயோகத்திற்கு ஆன்மீகப் பரிணாம யோகம் என்று பெயர். நாம் பிரகிருதியில் வாழ்கிறோம். பிரகிருதிக்குப் புருஷன் உண்டு. அது நமக்குத் தெரிவது இல்லை. பிரகிருதி புருஷனிலிருந்து உற்பத்தி ஆனது. பிரகிருதியுள் மறைந்துள்ள புருஷனை அறியாமல் பிரகிருதியின் ஆதியான புருஷனை நாடி தவம் செய்து மோட்சம் பெறுகிறோம். பூரணயோகம் பிரகிருதியுள் மறைந்துள்ள புருஷனை நாடுவது. தவத்தால் வெளியிலுள்ள புருஷனை நாடுவதற்குப் பதிலாக, சமர்ப்பணத்தால் உள்ளே உள்ள புருஷனை நாடுவது பூரணயோகம்.

10. பிரம்மத்தை வர்ணிப்பவை பல. அவற்றைத் தொகுத்துப் பார்த்தால் பிரம்மம் தட்டுப்படும்.

   ❈ **ரூபங்களும் சலனங்களும் பிரம்மத்தில் உறைகின்றன.**

   ❈ **மனம் பிரம்மம்.**

   ❈ **வாழ்வு பிரம்மம்.**

இதுபோன்ற சுமார் 30 கூற்றுகளை தொகுத்துப் பார்த்தால் பிரம்மம் தெரியும். ஒரு மெஷினின் பகுதிகளைச் சேர்த்தால் மெஷின் உண்டாகும். சேர்த்துப் பார்த்தல் என்றால் ஒரு கூடையில் அந்தப் பகுதிகளை வாரினால் அது மெஷின் ஆகாது. மெஷினில் சேர்ந்து இருப்பதுபோல் சேர்த்துப் பார்க்கும் தெளிவு இருந்தால் அவை சேர்ந்து மெஷினாகும்.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

''பொறுமையில்லை'' என்பதை இழந்ததால் என்னால் தாமதிக்க முடியாது.

*பொறுக்க முடியாதவன் அவசரத்தால் துடிப்பான்.*

*பொறுமையுள்ளவன் அவசரமில்லாமல் துடிப்பான்.*

**Himself the Play, Himself the Player, Himself the Playground.**
**ஆட்டமும் அவனே, ஆடுபவனும் அவனே, அரங்கமும் அவனே.**

மரபில் உலகை லீலை என்கிறார்கள். அவர்கள் ஆனந்தத்தை நாடுபவர்கள். நாத்திகவாதிகள் உலகம் யதார்த்தமானது என்கிறார்கள். அவர்கள் லீலையை மறுக்கிறார்கள். ஆனந்தத்தை நாடுபவர்கள் நாத்திகத்தை மறுக்கிறார்கள். இதரர் இவ்விரண்டையும் மறுத்து, உலகமே பரமன் என்கிறார்கள். ஸ்ரீ அரவிந்தம் மூன்றும் ஒன்றே, மூன்று பார்வைகட்கு மூன்று அம்சங்கள் தெரிகின்றன. அவற்றுள் முரண்பாடில்லை என்று கூறுகிறது.

ஒரு ஸ்தாபனத்தில் தலைவருக்குப் பரம எதிரியொருவன் மிரட்டல் கடிதம் எழுதுவான். அவன்தான் எழுதியது என அவன் மீது நடவடிக்கை எடுக்க அவன் கையெழுத்து இருக்காது. இது பல ஆண்டுகளாகத் தொந்தரவு. நிலைமை மாறியது. இதுநாள்வரை எதிரியாக இருந்தவனுக்குத் தலைவரால் காரியம் ஆக வேண்டியிருந்தது. எப்படிப் போவது? என்ன செய்வது என யோசனை செய்தான். ஸ்தாபனத்தில் கூட்டம் போட்டார்கள். தலைவர் உணர்ச்சி வசப்பட்டவர். எதிரி ஒரு மாலையை வாங்கி வந்து அவர் கழுத்தில் போட்டான். மாலை போடும் பழக்கமோ, சந்தர்ப்பமோ இல்லாத இடத்தில் உணர்ச்சி வசப்பட்ட தலைவர் கழுத்தில் மாலை விழுந்தவுடன் தழுதழுத்துப் போனார். எழுந்தார், பேசமுடியவில்லை. தொண்டை அடைத்தது. அவருக்கு எதிரி தெரியவில்லை, மாலை தெரியவில்லை, அவன் ஆதாயம் நாடுகிறான் என நினைக்க முடியவில்லை. பேச முயன்றார், முடியவில்லை. உட்கார்ந்தார், மீண்டும் எழுந்தார். சமாளித்துக்கொண்டு பேசினார், “சகோதரர் இப்படி செய்துவிட்டார்” என்றார். அதற்குமேல் பேச்சு வரவில்லை. தலைவர், மிரட்டல் கடிதம், எதிரி, ஆதாயம் எல்லாம் போய் உணர்ச்சியே மேலோங்கி நின்றது. உணர்ச்சிக்கு முழுமையுண்டு, ஒருமையுண்டு, ஐக்கியம் உண்டு, பாகுபாடு, பிரிவினை, பகுதியான நிலையில்லை. சிந்தித்தால் இவன் எதிரி எனத் தெரியும். உணர்ச்சிவசப்பட்டால் எதிரியின் செயல் எரிச்சல்மூட்டும். நான் தலைவர் எனக் கருதினால் அதிகாரம் வரும், ஆர்டர் பிறப்பிப்பார்.



பார்வை உணர்ச்சியால் முழுமையாகிவிட்டதால், பகுதிகள் மறைந்தன. முழுமையான உணர்ச்சி எஞ்சியது. **பார்வை ஆனந்தத்தால் முழுமையானால் யதார்த்தம், ஆட்டம், அரங்கம் மறைந்து, ஆனந்தம் மிஞ்சும்.** உலகை நாம் எண்ணத்தால் கண்டால் மாயையாகவும், செயலால் கண்டால் பிரகிருதியாகவும், உணர்வால் காணும்பொழுது லீலையாகவும் தெரிகிறது. ஆனந்தத்தால் உலகைக் காணும்பொழுது ஆட்டம் ஆனந்தமாகவும், ஆடுபவன் ஆனந்தமாகவும், அரங்கம் ஆனந்தமாகவும் தெரியும்.

- **தன்னையறியாத முழுமை விலங்குக்குரியது.**
- **தன்னையறிந்த முழுமை தெய்வத்திற்குரியது.**
- **மனிதனுக்குக் கீழேயும், மேலேயும் இரண்டும் உண்டு.**
- **எது வேண்டும் (choice) என்பதை நிர்ணயிப்பது மனிதனே.**
- **முழுமையை வாழ்வில் நாடும் மனிதன் பெறுவது அதிர்ஷ்டம், யோகத்தில் நாடுவது அருள்.**

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தொட முடியாதவரை உடல் நாடுவதில்லை.

இலட்சியம் இதயத்தைத் தொடுவதில்லை.

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

அண்ணன் - நமக்கும் புத்தகத்திற்கும் பாலமாக அமைவது ஆசிரியர், புத்தகத்தை எழுதியவர். அதுபோல் பணத்தை உற்பத்தி செய்யும் சமூகத்திற்கும் நமக்கும் பாலமாக அமைவது goodwill, நல்லெண்ணம்.

தம்பி - புரியவில்லை.

அண்ணன் - நாட்டில் அனைவருக்கும் வீடு, உணவு, உடை கிடைக்க வேண்டும் என்பது நல்லெண்ணம். அனைவருக்கும் எல்லாச் சேவைகளும் கிடைக்க வேண்டும் என்பதும் நல்லெண்ணம். மொழி, கல்வி, பணம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதும் நல்லெண்ணம், Public good will. நல்லெண்ணத்தால்தான் பொருள் பெருகியது, சேவை பெருகுகிறது, பணம் பெருகுகிறது.

தம்பி - இதை உதாரணத்தால் விளக்க முடியுமா?

அண்ணன் - Newspaper விலை நல்ல உதாரணம். ஒரு தினசரி பேப்பர் அடக்க விலை ரூ.10/-. அதை ரூ.3/-க்குத் தருகிறார்கள். விளம்பரம்மூலம் பணம் வருகிறது.

தம்பி - Newspaper கம்பனி பணத்தை பெற்று மக்களுக்கு வழங்கும் கருவியாக நீண்ட நாளாக செயல்பட்டு வருகிறது. Encyclopaedia Britannica ரூ.30,000 பெறுமானது இப்பொழுது இலவசமாக internetஇல் வருகிறது என்றால் கலைக் களஞ்சியம் இனாமாக வருகிறது எனப் பொருள். அதைப் பிரசுரம் செய்த கம்பனி இலட்சக்கணக்கான பிரதிகளை இனாமாக வழங்கியுள்ளது. பணம் பெருகுகிறது. இதுபோன்ற செயல்கள் ஆரம்பித்துப் பல பொருள்கள் மலிவாகவும், சில இனாமாகவும் கிடைக்கின்றன.



அண்ணன் - பணம் தன்னைத் தானே பெருக்கிக்கொள்வதற்கு இது நல்ல உதாரணம், ஏற்றால் நல்லது.

தம்பி - "நான் கலைக் களஞ்சியம் படிக்கவில்லை, internet வைத்ததில்லை, எனக்கு ஒன்றுமில்லையா" என்பவர் உண்டு.

அண்ணன் - புதியதாக வருவதைப் பயன்படுத்துபவர்கட்குத்தான் பலன் வரும்.

தம்பி - மற்றவர்கள், இந்நிலை பெருகி அனைவருக்கும் வரும்வரை காத்திருக்க வேண்டும்.

அண்ணன் - அது உண்மை. அதற்கும் ஓர் வழியுண்டு. நல்லெண்ணம் பணப்பெருக்கத்தை உற்பத்தி செய்வதால், நல்லெண்ணமுள்ளவர் அப்பலனை இப்பொழுதே பெறலாம். internet இருந்தால் நல்லது, இல்லாவிட்டாலும் முடியும். முடியும் என்றால் நல்லெண்ணம் ஆழ்ந்து ஊன்றியிருந்தால் முடியும்.

தம்பி - மேலும் தெளிவான விளக்கம் வேண்டும்.

அண்ணன் - பிறருக்கு உதவி செய்ய நல்லெண்ணம் தேவை. அதுவும் ஒரு பொருளைக் கொடுக்கும் அளவுக்கு நல்லெண்ணமிருப்பது கடினம். அப்படிக் கொடுக்கும் ஒருவரைப் பார்த்தால், பொருளைக் கொடுப்பது கடினம். "அந்த அளவுக்கு எனக்கு நல்லெண்ணமில்லை" என்பார். அடுத்த வேறு கட்டமும் உண்டு. மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு பொருளைக் கொடுக்கலாம். ஆனால் நல்லெண்ணத்தைக் கொடுக்க முடியுமா என்றால் அது பொருளைக் கொடுப்பதைவிடக் கடினம்.

தம்பி - வாயால் பேசுகிறோம். நான் பாஸ் செய்தபொழுது நண்பன் முதல் மார்க் வாங்க வேண்டும் என்று நினைப்பதே கடினமல்லவா? வாங்கிவிடப் போகிறான் என மனம் துணுக்குறுகிறது, என்பதே உண்மை.

அண்ணன் - வீட்டிற்குள் அண்ணனுக்கு வந்தால் தம்பிக்குப் பொறுக்கவில்லை, மனைவி பிரபலமானால் கணவன் முகம் சுருங்குகிறது, கணவனுக்குச் செல்வம் வருவதைப் பொறுக்காத மனைவியுண்டு என்பது நிலை. அடுத்தவருக்கு அதிர்ஷ்டம் வரவேண்டும் என்று நினைக்க வேண்டும், நினைத்துச் சந்தோஷப்பட முடியுமா என்று ஒருவரைக் கேட்டேன். ''அப்படிச் சொன்னால் சந்தோஷப்படலாம். என் நாத்தனாருக்கு 1 கோடி வரவேண்டும் என்றால் மனம் திக் என்கிறது. மனம் இடம் கொடுக்கவில்லை'' என்று பதில் வந்தது.

தம்பி - நம்முடன் உள்ளவர் மீது நல்லெண்ணம் தவறாதிருக்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக அதை விரிவு செய்து, பிறகு எட்ட இருப்பவர், வேண்டாதவர், அவர்கட்கும் அதிர்ஷ்டம் வரவேண்டும் என்று நினைக்க வேண்டும். அந்த நினைப்பு சந்தோஷம் கொடுப்பது நல்லெண்ணம்.

அண்ணன் - அதைத் தாண்டிய கட்டங்களுண்டு. இதுவரை வருபவர்கட்கே அதிர்ஷ்டம் வரும்.

தம்பி - நம் நல்லெண்ணம், உலகத்தின் நல்லெண்ணத்துடன் தொடர்பு கொண்டால், பணம் நம்மை நோக்கி வரும்.

அண்ணன் - அப்படி வருவது நல்ல பணமாக இருக்கும். தவறான பணமாக இருக்காது.

*தொடரும்.....*

❀❀❀





## இதுவோ உம் ரௌத்திரக் கருணை!

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

மாமிக்குக் கவலையேற்பட்டது. ஆசைக்குச் சில நாட்கள் வைத்துக்கொள்வதாய் அவளை அழைத்து வந்தார்கள். ஏதோ குழந்தை ஆசைப்பட்டது என்று பிரெஞ்சு கற்கவும் ஏற்பாடு செய்தாயிற்று. திடீரென்று அவள் பெற்றோர் வந்து அழைத்துப் போவதானாலும் இவர்களால் மறுக்கமுடியாது. நடுத்தரக் குடும்பங்களில் அக்காலங்களில் பெண்களை அதிகம் படிக்க அனுப்புவதில்லை. ஒருவேளை படித்துவிட்டாலும் திருமணம் செய்து மாமியார் வீட்டிற்கு அனுப்பிவிடுவதைத் தலையாய கடமையாய்க் கருதினார்கள். வேலைக்குப் போகும் பெண்ணை மாமியார் வீட்டார் விரும்புவதில்லை. உமாவின் தாய் உமாவிற்கு விரைவில் மணம் செய்விக்க ஆசைப்படுகிறாள். இந்நிலையில் இவள் டீச்சராவேன் என்கிறாள். உமாவின் பெற்றோர் என்ன சொல்வார்களோ என்ற பயம் மாமிக்கு.

அன்னையைப் பற்றி அறிந்துகொள்ளவே அவள் பிரெஞ்சு கற்கிறாள். அதன்பொருட்டு அவள் தன் வாழ்வு முழுவதையுமே அர்ப்பணிக்கவும் ஆசைப்படுகிறாள் என்பது வெளியில் ஒருவருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

"உமா! நீ இங்கு வந்து நாட்களாகிவிட்டன. எதற்கும் ஒருமுறை சென்னைக்குப் போய் உன் அம்மாவைப் பார்த்துவிட்டு வரலாமா?'' என்கிறாள் மாமி.

‘‘இங்கேயே இருக்கும் அம்மாவை அங்கு போய் ஏன் பார்க்கவேண்டும்?’’ என்றாள் உமா.

மாமி குழம்பிப் போனாள். “என்ன உமா சொல்கிறாய்? அம்மா சென்னையிலிருப்பதை, நீ அங்கிருந்து வந்ததை மறந்துவிட்டாயா?” என்றாள்.

உமா செல்லமாய்ச் சிணுங்கினாள். ‘‘நான் எதையும் மறக்கவில்லை. அம்மாவின் நினைவு என் இதயத்திலேயே இருக்கும்போது ஏன் அங்கு போகவேண்டும் என்றுதான் அப்படிச் சொன்னேன். நானிங்கிருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?” என்று தேம்ப ஆரம்பித்தாள்.

மாமி பாசத்தால் தவித்துப் போனாள். “என்ன உமா? உன்மீது அன்பில்லாமலா உன் அம்மாவிடம் கெஞ்சி உன்னை இங்கே அழைத்து வந்தேன். நீ இப்போதெல்லாம் முன்போல் கலகலப்பாகச் சிரித்துப் பேசுவதில்லை. தனியே வந்து உட்கார்ந்துவிடுகிறாய். அதனால் ஊர் நினைவு வந்துவிட்டதோ என்று நினைத்தேன்” என்றாள் மாமி. அன்புடன் அணைத்துக்கொண்டு, “சரி, சரி, சாப்பிட வா. சந்தோஷமாய் இரு” என்று பரிவுடன் அழைத்துப் போனாள்.

“ஏன் இன்றும் ப்ரீத்தி வகுப்பிற்கு வரவில்லை. அவள் வந்தால் அல்லவோ இனிய செய்திகள் வரும்”. உலகமே தனக்கு வெறுமையாய் தோன்றுவதை உணர்கிறாள் உமா. “தோழியின் பிரிவு இத்தனை ஏக்கம் தருமா என்ன? மறுநாள் எப்படியாவது போய் ப்ரீத்தியைப் பார்க்க வேண்டும்” என்று எண்ணிக்கொண்டாள்.

காலையில் மாமா அலுவலகம் புறப்பட்டதும் மாமியிடம், அடுத்த தெருவில் இருக்கும் தன் தோழியிடம் முக்கியமான நோட்ஸ் ஒன்று வாங்கிவருவதற்காக உத்தரவு கேட்டாள்.

“சீக்கிரம் வந்துவிடு உமா” என்றாள் மாமி நயமாக.



“கவலைப்படாதீர்கள் மாமி. கொஞ்சம் சந்தேகம் கேட்டுத் தெரிந்துகொண்டு வந்துவிடுவேன்” என்று அழகுறச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

ப்ரீத்தியின் வீட்டில் அவள் சகோதரிகள் போலும், இரண்டு இளம் பெண்களிருந்தனர். தன்னை ப்ரீத்தியின் பிரெஞ்சு கிளாஸ் தோழி என்று அறிமுகப்படுத்திக்கொண்டாள். அவர்கள் அன்புடன் இவளை வரவேற்று உள்ளே தம் அக்காவிடம் தெரிவித்தனர்.

ப்ரீத்தி குளித்து தூய ஆடை அணிந்து எங்கோ புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தாள். உமாவைப் பார்த்தவுடன் அன்புடன் விரைந்து வந்து, “வா உமா! இப்போது உன்னைப் பற்றித்தான் நினைத்தேன். நீயே வந்துவிட்டாய்” என்று கையைப் பற்றினாள்.

‘‘என்னை நினைத்தாயா? எதன்பொருட்டு நினைத்தாய்?’’ என்றாள் உமா.

“சரியான நேரத்திற்கு வந்திருக்கிறாய். நாங்கள் இப்போது அன்னையைத் தரிசிக்கும் நேரமல்லவா! அன்னையிடம் ஆசீர்வாதப் பூக்கள் வாங்குவோம். ஆஸ்ரமத்திற்கு என்னுடன் நீயும் வருகிறாயா?” என்றாள் ப்ரீத்தி.

“ஆகா! என் ஆவல் இத்தனை விரைவில் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கவில்லை. வருகிறேன் ப்ரீத்தி! அந்த அற்புதமானவரைத் தரிசிக்க எனக்கு மிகவும் ஆவலாய் இருக்கிறது” என்றாள் உமா.

“நீ இங்கு வருவது உன் வீட்டினர்க்குத் தெரியுமா உமா?” என்றாள் ப்ரீத்தி.

“இல்லை ப்ரீத்தி. அடுத்த தெருவில் ஒரு தோழியிடம் நோட்ஸ் வாங்கப் போகிறேன் என்று சொல்லி வந்திருக்கிறேன்” என்றாள் உமா.

"ஏற்பாடாக நீயே புத்தகமும் எடுத்துக்கொண்டு வந்துவிட்டாயா?" என்று கேலி செய்தாள் ப்ரீத்தி.

இருவரும் அமைதியாக மனதில் அன்னையைப் பற்றிய ஆர்வத்துடன் புறப்பட்டனர். இருவரும் எதுவும் பேசவில்லை. ஆஸ்ரமத்தில் அன்பர் குழாம் தரிசனத்திற்குக் காத்திருந்தது. உமாவை ப்ரீத்தி தனக்குப் பின்னால் நிற்கவைத்துக்கொண்டாள்.

பிரகாசமான முறுவலுடன் அன்னை வந்து தமக்கு இடப்பட்ட ஆசனத்தில் கம்பீரமாய் அமர்ந்தார். ஒவ்வொருவராய் அமைதியாய்ச் சென்று பணிந்து வணங்கி, அன்னையிடம் மலர் பெற்றுச் சென்றனர். ப்ரீத்தியும் மலர் பெற்று நகர்ந்தாள். உமா ஆவலுடன் அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அன்னை அவளைப் பார்த்துப் புன்னகைகூட செய்யவில்லை. ப்ரீத்தி, தான் அன்னையிடம் எப்படியெல்லாம் பேசிய அனுபவங்களைச் சொல்வாள். ஆனால் அவரோ அவளைப் பார்க்கக்கூட இல்லையே! என்று எண்ணினாள். அடுத்தது இவள் முறை முன்னே நகர்ந்து அன்னையின் திருமுன் சென்றாள்.

அன்னை இவளைத் தம் பார்வையால் துளைத்துவிட்டார். உடம்பெல்லாம் என்னமோ செய்கிறது. பரமஹம்சர் முதன்முதலில் விவேகானந்தரின் தலைமீது கை வைத்ததும், "என்னை என்னவோ செய்கிறீர்கள், விட்டுவிடுங்கள்! விட்டுவிடுங்கள்!" என்றதாகப் படித்தது நினைவிற்கு வந்தது. தன் நீண்ட நாள் விருப்பம் நிறைவேறும்போது ஏனிப்படி என்னவோ செய்கிறது. இது அச்சமா? ஆனந்தமா? என்று குழம்பினாள். அவள் கையிலிருந்த புத்தகத்தை மதர் உற்றுப் பார்த்தார். "அது என்ன கையில்?" என்று கம்பீரமாய்க் கேட்டார்.

"புத்தகம்" என்ற சொல் அவள் நாவில் அச்சத்துடன் புறப்படுமுன் புத்தகம் கை தவறி கீழே விழுந்தது. அதில் அவள் நேற்றிரவு



அன்னையைப் பற்றி ஒரு கருத்துக்கோவை எழுதி அந்தத் தாளை அழகாக பார்டர் வரைந்து பூக்கள் வரைந்து அழகுபடுத்தி வைத்திருந்தாள். புத்தகத்திற்குள்ளிருந்து அந்தத் தாள் வெளியே விழ, "என்ன அது?" என்றார் அன்னை அதிகாரமாய்.

தயங்கியவண்ணம் அந்தத் தாளை எடுத்து அவரிடம் சமர்ப்பித்தாள்.

வாங்கிப் படித்த அன்னையின் புருவம் மேலேறியது. கண்கள் அவளைத் தழுவிக்கொண்டன. அவள் உருகிப்போனாள். மலர்க்கொத்தை அவளிடம் கொடுத்து, ஒரு புன்னகை வீசினார். சரேலென்று எழுந்து போய்விட்டார்.

அவள் அறியாமையும், அகந்தையும் வீசி எறியப்பட்டனவோ? சில்லென்று உணர்ந்தாள். எப்படி இனித்தது அந்தப் புன்னகை. கற்பகோடி காலமும் மறக்க முடியாத புன்னகையல்லவா அது?

"உமா! என்ன மலைத்துப்போய் நிற்கிறாய்?" என்று தோளில் கை வைக்கிறாள் ப்ரீத்தி.

"ப்ரீத்தி! நீ பாக்கியசாலி. இந்த ஒரு புன்னகையே இப்படி இனிக்கிறது. நீ தினமும் அவரைத் தரிசிக்கிறாய். ஆனால் அன்னை உன்னைப் புன்னகையுடன்கூடப் பார்க்காமல் பூவைக் கொடுத்தனுப்பினாரே. உனக்கு வருத்தமில்லையா?" என்று மிகுந்த தயக்கத்துடன் கேட்டாள்.

"உமா! ஆரம்பத்தில் நானும் உன்னைப்போல் இதை அலட்சியம் என்றுதான் புரிந்துகொண்டு துன்புற்றேன். நாம் நம் மானுட இயல்பில் அவர் செயல்களுக்குப் பொருள் கற்பிக்கிறோம். ஆனால் அவர் செயல் ஒவ்வொன்றும் நம்மைப் பூரணப்படுத்துவதற்கு என்பது போகப்போகப் புரியும். நேற்று என்ன நடந்தது என்று தெரிந்தால் அன்னையின் செயலுக்கு வருந்தமாட்டாய்" என்றாள் ப்ரீத்தி.

“நேற்று அப்படி என்னதான் நடந்தது?” என்றாள் உமா.

“நான் மீண்டும் ஏன் வகுப்பிற்கு வரவில்லை தெரியுமா? மறுபடியும் வலக்கை தோள்பட்டைக்குக் கீழ் கட்டி வந்துவிட்டது. பெரிய கட்டி. வலி தாங்கவில்லை. அன்னையிடம் சென்று கதறி அழுதுவிட்டேன். என்னைப் பற்றியவண்ணம் தியானம் செய்தார். பிறகு எனக்குக் கிரகிக்கும் பிராண சக்தியில்லை என்றும் பன்னீர் மரத்தைப்போல் ஆதாரம் உறுதியில்லாதிருக்கிறது என்றும் கடிந்துகொண்டார். *“நீ ஊருக்குப் போய்விடு. நாளைக்கே புறப்படு. உனக்குப் பயணச் சீட்டு வாங்கித் தருகிறேன்”* என்று கடுமையாகக் கூறினார்.

அவரைப் பிடித்துக்கொண்டு கதறினேன். எங்கே போவது? உம்மைப் பிரிந்து நான் எப்படி இருப்பது? போகமாட்டேன். நான் உம்மைப் பிரிந்து எங்கும் போகமாட்டேன் என்று அழுதேன். தெருவெல்லாம் அழுதுகொண்டே வந்தேன். படுக்கையில் வந்து விழுந்தேன். நேற்றிரவெல்லாம் படுக்கையில் ரத்தமும் சீழும் சிதற என் தங்கைகள் படுக்கையைச் சுத்தப்படுத்தி, எனக்கு ஒற்றடம் கொடுத்து பக்கத்திலேயே இருந்திருக்கிறார்கள். ஒரே இரவில் அத்தனை வலியும், வேதனையும் மாறிவிட்டிருந்தது. வேதனையிலிருந்து விடுபட்டிருப்பது எத்தனை நிம்மதி தருகிறது தெரியுமா? இந்தப் பிறப்பின் அருமை புரிகிறது தெரியுமா?” என்றாள்.

“அது சரி ப்ரீத்தி, உன்னை ஊருக்குப் போகும்படி கடுமையாய் கூறியதாய்ச் சொல்கிறாய். இப்போதுகூட உன்னைத் திரும்பிப் பாராமலேயே பூவைக் கொடுத்து அனுப்பினார். அதற்கு என்ன பொருள்?” என்றாள் உமா.

“அவர் அன்பை, அருளை என் அகந்தை எடுத்துக்கொண்டு தான் வளர்ந்தது. அவர் விரட்டியது என்னை அன்று. என் ஜடத்தன்மையை. என் ஆன்மாவை மூடிய அகங்காரத்தை. சிறிதும் விழிப்பற்ற என் ஜடத்தன்மை நீங்கவே அன்னை தன் ரௌத்திர கருணையைப் பயன்படுத்தியிருக்கிறார். அவருக்கு ஏது விருப்பு,



வெறுப்பு? அவருக்கு யார் வேண்டியவர், யார் வேண்டாதவர்? கொடியவனைப் பற்றிக் கூறினால், *‘அவனும் என் குழந்தையல்லவா’* என்பார்” என்று உருகிக் கூறினாள் ப்ரீத்தி.

“என்ன சொல்கிறாய் ப்ரீத்தி? இப்படியெல்லாம் நீ எவ்வாறு புரிந்துகொள்கிறாய்?” என்றாள் உமா.

“ஸ்ரீ அன்னை நம்மிடையே இப்படி மானுட வடிவில் ஏன் வந்திருக்கிறார் என்று நினைக்கிறாய்? நம்மை வழிநடத்தி அழைத்துச் செல்லவே வந்திருக்கிறார். பகவான் எழுதிய *‘தி மதர்’* புத்தகம் படித்தால் நீ அவரைப் பற்றி ஓரளவு புரிந்துகொள்வாய்” என்றாள் ப்ரீத்தி.

“அப்படியா? அது இப்பொழுது எனக்குக் கிடைக்குமா? ப்ரீத்தி! எனக்கு அந்தப் புத்தகம் இருந்தால் கொடேன். படித்துவிட்டு கவனமாய் திருப்பித் தந்துவிடுகிறேன்” என்று கூறினாள்.

“இத்தனை ஆர்வமாய் கேட்கும் உனக்குத் தாராதிருப்பேனா? பொறுத்துக்கொள். எப்படியாவது நளினி மாமாவிடம் கேட்டு வாங்கித் தருகிறேன்” என்றாள்.

விடை பெற்றாள் உமா, எல்லையில்லாக் களிப்புடன்!

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனத்தின் எழுச்சியைப் பூர்த்தி செய்வதை விட்டொழித்தால் மனிதன் தெய்வமாகலாம்.

*எழுச்சியழிந்த மனிதன் தெய்வம்.*

Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Postal Regn. No.TN/PMG(CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45/03-05

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## SPIRITUALITY & PROSPERITY

### A Bi-Monthly Magazine for Spirituality

Suresh Menon, a journalist from Thrissur who had a spiritual vision, has started a magazine called Spirituality and Prosperity. As it was a long felt desire of mine, **I have endorsed his effort in all possible ways.** Behind great movements such as the Indian Freedom Movement or the French Revolution there lies an inspiring idea. *A magazine is a powerful tool to deliver that IDEA to the cream of the population*. The Divine Mother started ARYA in 1914 as a vehicle for the Supramental Manifestation.

India is a land of Rishis. Her sons carry the spiritual light in their bodies. The light is there in the very depths of being; but life is dry and poor. Indeed all Prosperity is a version of the Spirit. But the Spirit systematically expressed in life will be **PROSPERITY** of the divine life. The West is prosperous. Western prosperity is there because they have discovered Brahman in Matter. Their science is lifeless and produces negative side effects and strengthens the Forces of violence of all descriptions. My view is to *discover Brahman in Life so that Life will turn into LUCK, into one of unfailing success.* This **MAGAZINE** will aim at reporting in detail the experiences of believers who believe in the Spirit in life. Life in the cities shows signs of initial prosperity. There are many who are honest to the core, who have accepted honest ways as a discipline. **They prosper more than others. Our magazine will write about them or invite them to write.**

The central mission of the magazine is to explain **HOW** Spirituality can be expressed in daily life through explanations and examples. It invites readers to write articles about such experiences of theirs. Four American writers, a research scholar of the Mother's Service Society, and software engineers have agreed to contribute regularly. **The first issue is available on request from Suresh Menon (lordsrikrishna@mail.com) or from The Mother's Service Society**. For the Indian Spirit to emerge freely, Sri Aurobindo said, she must be **FREE.** When she became Free, **HE** said, she must be reunited with Pakistan. Her Spirit, which is destined to be the **GURU** of the world, cannot play her true role as long as she is poor. She must become **PROSPEROUS**, not only materially, but her Prosperity must be Spiritual. It must come to her spiritually. **All Prosperity is Spiritual. Let us discover that Spirituality is Prosperity.**

*-Courtesy The New Indian Express*

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# பர்சனாலிட்டி

நாம் பெரிய மனிதர்களைப் பற்றிப் பேசும்பொழுது நல்லவரா, திறமையானவரா, இராசி உள்ளவரா எனக் கருதுவோம். இவை மூன்றும் சேர்ந்தது பர்சனாலிட்டி எனப்படுவது. அன்னை C.D. தேஷ்முக், சியாமப் பிரசாத் முக்கர்ஜி, சென்னை I.G. ஆகியவரைப் பற்றிப் பேசியுள்ளார்.

C.D. தேஷ்முக் I.C.S. ஆபீசர். அவர் ஜனாதிபதி தேர்தலுக்கு நின்றபொழுது, “இவர் இந்தியாவின் பெருமையை நிலைநாட்டுவார்” என்றார் அன்னை. 1950இல் ஆசிரமப் பள்ளி ஆரம்பித்தபொழுது கல்கத்தாவிலிருந்து சியாமப் பிரசாத் முக்கர்ஜி வந்திருந்தார். அன்னை அவரைப் பார்த்து, “இவர் நாட்டைக் காப்பாற்றக் கூடியவர்” என்றார். சியாமப் பிரசாத் இந்து மகாசபைத் தலைவர் என்பதால் வகுப்புவாதி என்று அரசியலில் அவருக்கு நல்ல பெயரில்லை. 1946இல் மந்திரி சபையில் - டெல்லி - உணவு மந்திரியாக இருந்தார்.

1963இல் நேரு அன்னையைத் தரிசிக்க வந்தபொழுது அவருடனிருந்த அரசியல்வாதிகள், மந்திரிகள், சுமார் 20 அல்லது 30 பேர் தாங்களும் அன்னையைத் தரிசிக்க அடித்து மோதிக்கொண்டு உள்ளே போய் அன்னை முன் நின்றனர். சென்னை I.G. நேருவுடன் பாதுகாப்பாக வந்திருந்தார். அன்னை, “இவ்வளவு பேரிலும் போலீஸ் I.G. ஒருவரே பர்சனாலிட்டி உள்ளவர்” என்றார்.

I.C.S. ஆபீசருக்கு அரசியலில் என்ன வேலை? வகுப்புவாதி பிற்போக்குவாதி. போலீஸ் கடுமையானவர் என்பது நம் போன்றவர் அபிப்பிராயம். மேலேழுந்த இதுபோன்ற அபிப்பிராயங்களையும், திரைகளையும் கடந்து, அன்னை பார்ப்பது அவர்களுடைய ஆத்மாவை. ஆத்மா பர்சனாலிட்டியாக வெளியில் தெரிகிறது.

❀❀❀

# சிக்கலை அவிழ்க்கும் சமர்ப்பணம்

The Life Divineஇல் 24ஆம் அத்தியாயம் ஜடம். நூலில் கடினமான அத்தியாயங்களில் ஒன்று. அவற்றுள் மிகச்சிக்கலானது. அதன் கடைசி பாரா (பக்கம் 239) அத்தியாயத்தின் சுருக்கம். 7 வாக்கியங்களுடையது. கடுமையான பகுதியின் சுருக்கம் என்பதால் கடுமையான சிக்கலானது. அதன் கடைசி வாக்கியம் “ஜடம் என்பது சச்சிதானந்தம்” என்று முடிகிறது. சர்வம் பிரம்மம் என்ற ரிஷிகள் ஜடம் இருள்மயமானது என்பதால் விலக்கிய கருத்து. முயன்று இதைப் புரிந்துகொண்டால், நூலில் வேறு எந்த இடமும் இனி புரியாமலிருக்காது. முயன்று புரிந்துகொள்வதை சமர்ப்பணம் செய்தால் முயற்சியின் கடுமை குறையும். 13 ஆண்டுகளாக நான் பயிலும் பகுதியிது. கடுமையாக இருப்பதால் 3 ஆண்டுகட்குமுன் இந்த 7 வாக்கியங்களைப் பிரித்து 50 அல்லது 60 வாக்கியங்களாக எழுதினேன். மேலும் சற்றுத் தெளிவாகப் புரிந்தது. ஆனால் அடுத்தவர்க்கு எடுத்துச் சொல்லும் அளவுக்குத் தெளிவில்லை. இப்பொழுது அந்த 50 சிறு ஆங்கில வாக்கியங்களை தமிழ்ப்படுத்தினேன்.

- ☆ நாம் சொல்வது பிறருக்குப் புரியவில்லை என்றால், நமக்குத் தெளிவு போதாது எனப் பொருள்.
- ☆ **13 ஆண்டுகள் நான் முயன்றது, முயன்று புரிந்துகொண்டது, பக்தியும் ஆர்வமும் உள்ளவர்க்கு 13 நாட்களில் அல்லது 130 நாட்களில் புரியலாம். கேட்பவருக்கும், சொல்பவர்க்கும் சமர்ப்பணம் பூரணமானால் ஒரே நாளிலும் புரியும் என்பது சமர்ப்பணத்தின் சக்தி.**
- ☆ *அப்படி, சீக்கிரம் புரிய இந்த **50** வாக்கியங்களில் உள்ள **50** எண்ணங்கள், மனப்பாடம் செய்யாமல் ஒன்று அடுத்ததை நினைவுபடுத்தவேண்டும். இதற்கு உதாரணம் உதவும். சமர்ப்பணம் உதாரணம் இல்லாமலும் புரிய உதவும் திறனுடையது.*

எனக்குத் தெளிவு 100% முயன்றேன், 90%இல் வந்து நின்றுவிட்டது. 100% தெளிவு பெற்றபின் அடுத்தவர்க்குச் சொல்ல நினைத்தேன். இரு அன்பர்களின் ஆர்வம் 90% இருக்கும்பொழுதே என்னைச் சொல்லத் தூண்டியது. சொல்லிப் பார்த்தேன். முதல் நாள் ‘புரிகிறது’ என்றார்கள். அடுத்த நாள் 1) நான் சொன்னேன், 2) நூலைப் படிக்கச் சொன்னேன், 3) ஆங்கிலத்தில் சிறு வாக்கியங்களைப் படித்தனர், 4) தமிழில் படித்தனர், 5) மீண்டும் நூலைப் படித்தனர். நன்றாகப் புரிகிறது என்றனர். அது உண்மையானால் அது பிரம்ம ஞானம். இதை அனைவருக்கும் சொல்ல முடியுமா என நினைத்தேன். முடியும் எனப்பட்டது. அதனால் இதை எழுதுகிறேன். சமர்ப்பணம் 13 ஆண்டுகள் போராட்டத்தை ‘புரிகிறது’ என்று 2 நாட்களில் சொல்ல வைக்கிறது. இது புரிந்தால் The Life Divineஇல் புரியாதது இல்லை.

❀❀❀